Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 22 திங்கட்கிழமை (08.12.2014) பக்கங்கள் 20 ஓசை – 069

## 3 முக்கிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும்

### மக்களிடம் கோருகிறது அரசு

(கொழும்பு)

தேசியப் பாதுகாப்பு, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய மூன்று விடயங்களைக் கருத்தில் கொள்ளப்பட வேண்டுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் டளஸ் அழகப்பெரும மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேர்தல் காலத்தை ஒட்டி அரசியல்வாதிகள் பல்வேறு விடயங்களைப் பற்றிக் கூறுவார்கள். ஆனால் மக்கள் மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்கள் தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

எதிர்வரும் தேர்தல் மூலம் எதிர்காலத்தில் இந்த மூன்று விடயங்களும் நிலைத்திருப்ப

(19) ஆம் பக்கம் பார்க்க...

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலகத்தில் இன்று இடம்பெறவிருந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறமாட்டாது எனவும், இக்கூட்டம் நாளை மறுதினம் 10 ஆம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாளை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவிருக்கும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் திட்டமிட்டபடி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பேருந்து கட்டணங்கள் குறைவடையாது

(கொழும்பு)

எரிபொருள் விலை குறைக்கப்பட்டிருப்பினும், பேருந்து கட்டணங்களைக் குறைப்பது தொடர்பில் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லையென இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், இது தொடர்பில் எதிர்வரும் தினங்களில் பேருந்து உரிமையாளர்கள் சங்கங்கள் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக

(19) ஆம் பக்கம் பார்க்க...

# ஜனாதிபதித் தேர்தலில் 19 வேட்பாளர்கள் களத்தில்

## இன்று வேட்பு மனுத்தாக்கல்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் கட்டுப்பணம் செலுத்தும் காலம் நேற்று நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடைந்தது.

இதன்படி 17 அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும், 2 சுயேட்சை வேட்பாளர்களும் தங்களின் கட்டுப்பணத்தை செலுத்தி இருப்பதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு ஏற்கும் நடவடிக்கை இன்று இடம் பெறவுள்ளது.

இன்று காலை 9.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரையான இரண்டு மணித்தியாலங்களில் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்றைய தினம் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில், தேர்தல்கள் திணைக்களம் அமைந்துள்ள ராஜகிரிய உள்ளிட்ட கொழும்பு நகரில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இதற்காக விசேட போக்குவரத்து விதிமுறைகள் அமுலாக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதன்படி இன்று காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரையில், ஆயுர்வேத சுற்று வடடம் முதல் வெலிக்கடைச் சந்தி வரையான நாடாளுமன்ற வீதி

(19) ஆம் பக்கம் பார்க்க...

## இலங்கையின் அரசியல், பாதுகாப்பு உன்னிப்பாக அவதானிக்கும் இந்தியா

இலங்கையின் அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலைமைகளின் முன்னேற்றம் குறித்து, இந்தியா மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், தேர்தல் காலத்தில் தமிழர்களின் பாதுகாப்பு விடயத்திலும் புதுடில்லி கூடுதல் கவனம் செலுத்துவதாகவும் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் குமார் டோவல் கடந்தவாரம், காலி கலந்துரையாடல் -2014 இல் பங்கேற்பதற்காக, கொழும்பு வந்திருந்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜ

(19) ஆம் பக்கம் பார்க்க...

## இலங்கையின் அபிவிருத்திக்கே நிதியுதவி அளிக்கிறது சீனா

### ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

சீனாவின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் இலங்கையின் அபிவிருத்திக்கு உதவியுள்ளன என அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அம்பாந்தோட்டை துறைமுகம், மாத்தறை விமான நிலையம், நுரைச்சோலை மின்நிலையம் என அனைத்தும் இலங்கை மக்களுக்கு நன்மையை அளித்துள்ளன. இந்தத் திட்டங்கள் மூலம் இலங்கையின் நிதி வீணடிக்கப்படவில்லை. சிலர் எமக்கு ஏன் பெருந்தெருக்கள் தேவை, நாங்கள் அதனை உண்ணப்போகின்றோமா என கேட்கின்றனர்.

எங்காவது செல்லும்போது நேரத்தை மிச்சப்படுத்த வேண்டியதன் அவசியம் உங்களுக்கு தெரியும். அதனை அறியாதவர்களே கேள்விகளை எழுப்புகின்றனர். அரச திட்டமொன்றை குறைசொல்வதற்கு ஊழல் குற்றச்சாட்டை முன்வைப்பதே எதிர்க்கட்சியினருக்கு இலகுவான விடயம். இலங்கையில் குற்றச்செயல்கள் குறைந்துவிட்டன. எனினும் ஊடகங்கள் ஒருசில சம்பவங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் காரணமாக மக்கள் குற்றச் செயல்கள் அதிகரித்துவிட்டன எனக் கருதுகின்றனர்.

பொலிஸாரின் அறிக்கை குற்றச்செயல்கள் குறைவடைந்துவிட்டன என தெரிவிக்கின்றது. ஊடகங்கள் சாதகமான விடயங்களையும் வெளியிடவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மைத்திரியை ஆதரிக்க கூட்டமைப்பு இணக்கம்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக, மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக முன்னிறுத்தியுள்ள எதிரணியின் சார்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அதிகாரபூர்வமற்ற பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளதாக, சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் அமைப்பாளர் வண.மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுக்களில் எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதற்குச் சாதகமான சமிக்ஞைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்தியதாகவும் அவர்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## பட்டப் பகலில் 10 பவுண் திருட்டு


(அளவெட்டி)

அளவெட்டி வடக்குப் பகுதியில் உள்ள வீடொன்றில், ஆட்கள் யாரும் இல்லாத நேரம் பார்த்து நுழைந்த திருடர்கள் 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான 10 பவுண் நகைகளை திருடிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளதாக தெல்லிப்பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜ.என்.எஸ். கஸ்தூரியாராச்சி தெரிவித்தார்.

வீட்டில் உள்ள அனைவரும்

(19) ஆம் பக்கம் பார்க்க...



# யுவதி மீது பாலியல் துன்புறுத்தல்; விசாரணைகளை நடத்த ஏற்பாடு

கிளிநொச்சி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த யுவதி மீது ஆண் தாதி பாலியல் சேஷ்டை புரிந்துள்ளமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ள, நீதிமன்ற உத்தரவைப்பெற நடவடிக்கைகளைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்த 27 ஆம் திகதி கடும் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட யுவதி அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

28 ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் பிரஸ்தாப ஆண் தாதி யுவதி மீது சேஷ்டை புரிந் துள்ளார்.

மறுநாள் யுவதி விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளார். எனினும் இருநாட்கள் கழிந்த நிலையில் யுவதிக்கு உடல்நலம் மீண்டும் மோசமடையவே மீண்டும் அவசரப் பிரிவுக்கு மாற்றப்பட்ட நிலையில் யுவதி அங்கு செல்ல மறுத்து ஆண் தாதி பாலியல் சேஷ்டை குறித்து தெரிவித்த தன் அடிப்படையில் 'அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் தனக்கு நடந்த பாலியல் சேஷ்டை குறித்து வைத்தியரிடம் தெரிவித்ததன் அடிப்படையில் வைத்தியசாலை பொலிஸாரிடம் முறையிடப்பட்டு கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல வழங்கப்பட்டுள்ளது.

இது விடயம் தொடர்பில் நீதிமன்ற உதவியை நாடவுள்ளதாக குறித்த யுவதியின் உறவினர்கள் தெரிவித்தனர். (81)

# ஆலயச் சூழலில் வாழ்ந்துவந்த வயோதிப மாது உயிரிழப்பு

(கரணவாய்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் பிச்சை எடுத்து வாழ்ந்து வந்த வயோதிபப் பெண்ணொருவர் தனது உறவினர் வீட்டுக்கு சென்ற சமயம் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் கரணவாய் தெற்கைச் சேர்ந்த இராஜலட்சுமி இராஜகோபால் (வயது ...) என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

வயோதிபப் பெண் கவனிப்பாரற்ற நிலையில் குறித்த செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் வாழ்ந்துவந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு உறவினர் வீட்டுக்குச் சென்ற சமயம் உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் தற்போது மந்திகை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் குறித்த பெண்ணுக்கு மகன் உள்ளதாகவும், அவர் முல்லைத்தீவு கள்ளப்பாடு கிராமத்தில் வாழ்ந்து வருவதாக தகவல்கிடைத்துள்ள நிலையில் இவரை தனது தாயின் சடலத்தை பொறுப்பேற்குமாறு நெல்லியடி பொலிஸார் அறிவித்துள்ளனர். (18)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | திங்களி |
|---|---|
| AM 05.00 | ஆலய தரிசனம் (பக்தி பாடல்கள்) |
| AM 07.00 | காலை கதிர் |
| AM 08.00 | நாளிதழ் நேரம் |
| AM 09.00 | SMS Time (Live) |
| AM 09.58 | காலை செய்தி |
| AM 10.00 | HELLO DD |
| AM 10.30 | புதுயுகம் |
| AM 11.00 | சிரிக்க சிரிக்க |
| AM 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 12.30 | தமிழ் பேசு தமிழா |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | நகைச்சுவை திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்தி |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 07.30 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | HELLO DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |


## தொலைக்காட்சித் துறையில் சாதிக்க வேண்டும் என கனவு காணும் திறமையுள்ள உங்களுக்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்

DDTV யில் நீங்கள்

- செய்தி வாசிப்பாளராக ஆசைப்படுகிறீர்களா?
- நிகழ்ச்சித் தொகுப்பாளராக ஜொலிக்கவேண்டுமா?
- படத்தொகுப்புத் துறையில் கைதேர்ந்தவரா (Editor? (Adobe Premier CC, After Effect, 3 D Max/ Maya/ Cinema 4D)
- சிறந்த படப்பிடிப்பாளரா (Camera Man)?
- ஒப்பனைத்துறையில் முன் அனுபவமும் திறமையுமுள்ளவரா?
- சந்தைப்படுத்தல் துறையில் முன் அனுபவமும் வல்லமையும் மிக்கவரா?
- அலுவலகப் பணிகளில் ஆர்வம் மிக்கவரா?
- (தகைமைகள் க.பொ.த சாதாரணதர சித்தி மற்றும் கணனிசார் அறிவு)

உங்கள் சுயவிபரக்கோவை, அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் தகைமைச் சான்றிதழ்களுடன் எம்மைச் சந்தியுங்கள்

காலம் : 13.12.2014 திகதி சனிக்கிழமை, முற்பகல் 10.00 மணி

இடம்: இல.50/57, 3 ஆம் மாடி, யாழ். மாநகரசபை கட்டடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2587 திகதி 06-12-2014

ஆங்கில எழுத்து: X

வெற்றி எண்கள்: 11 16 18 53

போனஸ் இல: 41

ஜக்பொட் பரிசு ரூ.21,824,425/-வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 131093 | 20/- | 2,621,860/- |
| 2 இல | 9421 | 100/- | 942,100/- |
| 3 இல | 199 | 1,000/- | 199,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 5293 | 40/- | 211,720/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 404 | 1,000/- | 404,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10 | 10,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 21,824,425/- | - |
| 1 இல + போனஸ் இல | 6275 | 100/- | 627,500/- |
| 2 இல + போனஸ் இல | 295 | 500/- | 147,500/- |
| 3 இல + போனஸ் இல | 02 | 100,000/- | 200,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 251 | 200/- | 50,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 13 | 1,500/- | 19,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 153257 | | 6,523,380/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.12.10 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 22,182,200/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3919)



## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 222 8680, 077 592 5088.

(C/3589)


# பால்நிலை வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வின் இறுதி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் சமூக செயற்பாட்டு மையம் நடாத்தும் பால் நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்பாட்டு விழிப்புணர்வு நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 10 மணி முதல் இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்திற்கான பதில் இந்திய பிரதி தூதர் ... மூர்த்தி கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் பவானி ஞானச்சந்திரமூர்த்தி கலந்து கொள்வார்.

பால் நிலை வன்முறைக்கு எதிரான கருத்துரைகள், விழிப்புணர்வு ... வுகள் ... இதன் போது இடம்பெறவுள்ளன.

நிகழ்வின் இறுதியில் பால நிலை வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள் வெளியிடப்படவுள்ளதோடு வாகனங்களிலும் அவை ஒட்டப்படவுள்ளன. (18)


## வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ச. துஷாந்

முகவரி : நயினாதீவு, 5 ஆம் வட்டாரம்

அகவை 7 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



யாழ். சமூக செயற்பாட்டு மையம்
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
மறக்காத மகளிர் தினத்தில் மட்டும் மறுக்கப்படும் பெண் சுதந்திரம் பற்றி பேசாமல், நித்தமும் அதனை உணர்வதற்கான சுதந்திர சூழலை உருவாக்குவோம்.
JSAC
16
2014

# சுகாதார முன்னோடியாக நம்நாடு திகழ உயர்தர சுகாதாரத்தை அரசு வழங்குகிறது

## யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தெற்காசிய பிராந்தியத்தில் சுகாதார முன்னோடியாக இலங்கை திகழ்வதற்காக, உயர்தர சுகாதார சேவையை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக யாழ்.மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

ஆரோக்கிய இலங்கை தேசிய சுகாதார நிகழ்ச்சித்திட்டம் 2014 தொடர்பில் விளக்கமளிக்கும் கலந்துரையாடல், யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போது, அதில் கலந்துகொண்ட மாவட்ட செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த சிந்தனை தொலைநோக்கு என்ற கோட்பாட்டுக்கமைய, தேசிய நிகழ்ச்சித்திட்டம் ஊடாக இலங்கை மக்களின் சுகாதார நிலையை மக்களின் அறிவு, சிந்தனை மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றை மேலும் மேம்படுத்தும் நோக்கில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சுகாதார சேவைகள் தொடர்பாகவும், நோய்கள் பரவுதல் தொடர்பாகவும் மக்கள் அறிந்து கொள்ளும் முகமாக விசேட சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது என்றார்.

யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் எஸ்.பேரானந்தராஜா, மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

## இலவச கணனி வகுப்புக்கள் ஆரம்பம்

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தினால் இலவச கணனி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பழைய மாணவர் சங்கத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள இலவச கணனி கற்கைநெறியில் வயது வரையறையின்றி மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மட்டுமன்றி ஏனைய பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் என அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

எதிர்வரும் தை மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள மைக்ரோசொப்ட் அலுவலகம், தமிழ் தட்டச்சு, இணையம், மின்னஞ்சல் (Microsoft office, tamil typing, Internet, e-mail) ஆகிய இக் கற்கைநெறிகள் 2 மாத முழுமையான பயிற்சி நெறியாகும். கற்கைநெறி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இக்கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவு எதிர்வரும் 31 ஆம் திகதியாகும்.

# அதிபர் சங்கக்கூட்டம்

(திருநெல்வேலி)

வலிகாமம் அதிபர் சங்கக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மருதனார் மடத்தில் உள்ள வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா இந் நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் தெல்லிப்பளை உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சண்முககுலகுமரன், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவானந்தராஜா, சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் செல்வி எஸ். மரியாம்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வலிகாமம் வலயத்தை சேர்ந்த சகல அதிபர்களையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வலிகாமம் அதிபர் சங்கத்தலைவர் தேவதயாளன் கேட்டுக் கொண்டுள்ளார். (137)



கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தில் சாவகச்சேரி பொலிஸார் நடாத்திவரும் நடமாடும் சேவையின் ஒருபகுதியாக கைதடி முச்சக்கர வண்டிச் சங்கத்துடனான சந்திப்பு இடம்பெற்றபோது... (51)

# உணவுப் பொதிகள் வழங்கல்

(திருநெல்வேலி)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஜே/109 சங்கிலியன் தோப்பு கிராம அலுவலர் பிரிவை சேர்ந்த சுமார் 30 குடும்பங்களுக்கு நல்லூர் சங்கிலியன் மன்றம் உலர் உணவுப் பொதிகளை வழங்கியது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் மன்ற முன்றலில் வைத்து மன்றத்தின் தலைவர் தியாகராஜா, கிராம உத்தியோகத்தர் இ.சந்திரகுமார் மற்றும் உறுப்பினர்களினால் இப் பொதிகள் வழங்கப்பட்டன.

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 9 ஆவது சமூக நலத்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (137)

# அவரவர் சொந்தநலன் வாய்ப்புகளைக் கவனமாகப் பற்றி முன்னேறுகிறார்கள் தமிழரசுத் தலைகள்...




சபாஷ்!

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்து விட்டது.

தமிழரசுக் கட்சி எம்.பி சிறிதரன் இந்தப் பிரச்சாரத்தைக் கிளிநொச்சியில் தொடங்கியிருக்கிறார் என்று அங்கிருந்து நம்பகரமான தகவல்கள் கிடைத்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் முறிப்பு, விவேகானந்த நகர் போன்ற கிராமங்களில் உள்ள மக்களை அழைத்து இந்த அறிவிப்பை விடுத்திருக்கிறார் சிறிதரன்.

இதற்கு முன், அவர் தன்னுடைய ஆதரவாளர்களையும் தமிழரசுக்கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்களையும் அழைத்து, "பொதுஅணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும். மைத்திரிபால சிறிசேனவையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கப்போகிறது. ரணில் விக்கிரமசிங்கவுடன் இதைப்பற்றி தமிழரசுக் கட்சியினர் பேசி வருகிறார்கள். தமிழரசுக் கட்சி தீர்மானம் எடுத்தால் அதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள மற்றக் கட்சிகள் ஏற்றுக்கொள்ள வேணும். மற்றக் கட்சிக்காரர்களால் தமிழரசுக்கட்சியை எதிர்த்து நிற்க முடியாது. அவர்கள் தமிழரசுக்கட்சியின் தயவில்தான் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பற்றி நாங்கள் (தமிழரசுக் கட்சியினர்) கவலைப்படத் தேவையில்லை. எனவே நீங்கள் ஊர்களில் பொது அணி வேட்பாளருக்கான பிரச்சாரத்தைத் தொடங்குங்கள்" என்று கூறியிருக்கிறார்.

இதைத் தொடர்ந்துதான் மேற்படி கிராமங்களில் தேர்தல் பிரச்சாரப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

'விதை தானியங்கள் விநியோகம், புத்தகப் பைகள் வழங்கல் என்ற பேரில் மக்கள் அழைக்கப்பட்டு, மேற்படி தேர்தல் பிரச்சாரம் நடத்தப்பட்டிருக்கிறது.

தமிழரசுக்கட்சியின் தலைவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது, எந்த அடிப்படையில் ஆதவளிப்பது, அதை எப்படி மக்களுக்கு எடுத்துச் சொல்வது என்று கூடி ஆராய்ந்து கொண்டிருக்கும்போது தமிழரசுக்கட்சியின் இளைய உறுப்பினர் ஒருவர் பகிரங்கமாக இப்படி நடவடிக்கையில் அதிரடியாக இறங்கியிருப்பது பலருக்கும் சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழரசுக்கட்சி எம்.பி மார்களான சரவணபவனும் சிறிதரனும் தமிழ்மக்களிடம் செல்வாக்குச் செலுத்தும் ஊடகங்களை வைத்திருப்பதால், இவர்களுடைய தயவை எதிரணி நாடியிருப்பதாக இன்னொரு நம்பகரமான தரப்பிலிருந்து செய்திகள் கிடைத்துள்ளன.

தமிழ்வின், லங்கா சிறி, ஜே.வி.பி இணையத்தளங்களை சிறிதரன் வைத்திருப்பதால், சிறிதரனுடன் பேரம்பேசி ஒரு தொகை பணம் வழங்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. இதை சில ஊடகங்கள் உறுதிப்படுத்தியுமுள்ளன.

இதைப்போல உதயன் சுடரொளி பத்திரிகைகளின் மூலமாக தமிழ்மக்களிடையே தமக்கான ஆதரவை வளர்ப்பதற்கு உதவுமாறு கேட்டு சரவணபவனை பொது அணியின் சார்பாக – ரணில் நாடியிருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பதைப் பற்றிய பேச்சுவார்த்தைகளிலும் உடன்படிக்கைகளிலும் தமிழரசுக்கட்சியின் உயர்மட்டத்தலைவர்கள் கொழும்பில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது அவர்களுடைய கைகளுக்குக் கீழ் இருக்கும் இந்த இரண்டு எம்பிமாரும் தனியாக லைனை எடுப்பதையிட்டு பலரும் முகம் சுளித்திருக்கிறார்கள்.

ஆனால், ஊடகபலம் இருப்பதால் தம்மை யாரும் எதுவும் செய்ய முடியாது என்று சரவணபவன் தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர் ஒருவரிடம் சொல்லியிருக்கிறார்.

இது அந்தக் கட்சியில் உள்ள ஏனையவர்களுக்கான – முக்கியமாக மூத்த தலைவர்களுக்கான எச்சரிக்கை என்று இதை அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

அதாவது அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் யாழ் மாவட்டத்திலிருந்து ஆறு பிரதிநிதிகளுக்கே பாராளுமன்றம் போக வாய்ப்பிருப்பதால், தமிழரசுக் கட்சியிலுள்ள ஒவ்வொருவரும் தன்னைக் கட்சி தவிர்க்க முடியாது என்று தலைவர்களுக்கு மறை முக எச்சரிக்கைகள் விடுக்க ஆரம்பித்துள்ளனர்.

எது எப்படியோ, ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசுக்கட்சியை வளைத்துப் பிடிப்பதற்காக ஒவ்வொருவராக மணந்து பிடித்து அவர்களுக்கு கையில் வைத்துக்கொண்டிருக்கிறது பொது அணி.

தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர்களுடன் கொழும்பில் பேசிக்கொண்டிருக்கவே அதற்கு முதல் காரியங்களைக் கச்சிதமாக நடத்தி முடித்து விட்டது பொது அணி.

இனப்பிரச்சினைக்கான தீர்விலும் பொது அணி இப்படித்தான் ஊடுருவல் தாக்குதல் நடத்துமா?

சபாஷ்! பொது அணி கில்லாடி அணிதான்.

நம்பிக்கை என்பது புயல் காற்றில் துவண்டு விழும் மெல்லிய மலரல்ல அது அடிபெயரா இமயம் போன்றது. - காந்திஜி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வெட்கமே வருவதில்லையா?

தமிழ்க் கூட்டமைப்பு அரசியல்வாதிகள், அவர்களது தமிழ் ஊடகங்கள், அரசியல் கட்டுரையாளர்கள் எல்லோரும் சொல்கிறார்கள், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு தரப்புமே தமிழர்களுக்கு எதையும் தரமாட்டார்களாம்!

இது யாருடைய தோல்வி? அவர்களுடைய தோல்வியா? இந்த நாட்டின் தேசிய அரசியலில் உங்களுக்கு ஒரு வகிபாகத்தை எடுக்க முடியவில்லை என்கிற வங்குரோத்தை மறைக்க, அவர்களைக் கரித்துக்கொட்டி தமிழ்மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கலாம். அதனால் ஆகப்போவதென்ன?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கமாகியுள்ள நிதி மோசடிக்காரர்கள், மக்களை ஏமாற்றிச் சம்பாதித்தோர், மக்களை அழிவைநோக்கித் தள்ளிவிட்டு தங்கள் குடும்பத்தைக் காத்துக் கொண்டு ஓடியவர்கள், பேச்சால் ஏமாற்றிவிட்டுச் சொந்த வசதி வாய்ப்புகளைப் பார்த்துக் கொள்கிறவர்கள், மக்களுக்கு வீரச்சவடாலும் அரசுக்கு கூழைக்குழைவுமாகத் தங்கள் அலுவல்களைப் பார்த்துக் கொள்வோரெல்லாம் பதவிகளைப் பிடித்து அமர்ந்துவிடுகிறார்கள்.

மக்களுக்கு எதையாவது செய்யக் கேட்டால், சிங்களத் தரப்பிலுள்ள எவருமே தமிழருக்கு ஒண்டையுந் தரமறுக்கிறார்கள்; அவர்களால்தான் உங்களுக்கு எல்லாக் கஷ்டமும் என்று வலுகூலாக அந்தப்பக்கம் கையைக் காட்டிவிட்டு, அரசு குடுத்த காரும் ட்ரைவரும் இதர வசதிகளுமாக ஏறிக் கிளம்பிவிடுகிறார்கள்.

அட, அறுந்துபோவாரே... எல்லாக் கஷ்டங்களையும் தீர்க்க தமிழ்மக்கள் எல்லோரும் ஒத்தபடி உங்களுக்கே வாக்களிக்க வேணும் என்று மேடைக்கு மேடை சொல்லிக் கேட்டுத்தானே வாங்கிக்கொண்டு போனீர்கள்... இதையெல்லாம் அரசிடமும் சிங்களத் தரப்புகளிடமும் போய்க் கேட்க, தமிழர்கள் அவர்களுக்கா வாக்குகளை அளித்தார்கள்?

“மலர்ந்தது தமிழரசு” என்று, வடக்கின் ஆட்சியைக் கைப்பற்றி வைக்கோல் போரில் படுத்துக்கொண்டுவிட்டது போல இப்போதும் சொகுசாய் அங்கே அமர்ந்திருப்பது நீங்களல்லவா?

கூடம் சரியில்லை, மற்றவர்கள் சரியில்லை, இந்த உலகமும் சரியில்லை என்று புறணிகள் பாடியபடியே எவ்வளவு காலத்துக்குத்தான் தமிழ்ச் சனத்தை ஏமாற்றிக் கொண்டிருப்பீர்கள்?

உங்களுக்கு வாக்களித்த பொதுமக்கள் வந்து அதையெல்லாம் திருத்திச் சரிப்படுத்தித் தந்தால்தான் நீங்கள் அதன்பிறகு தீர்வை எடுத்துத் தருவீர்களா? என்ன திருகுதாளம் இது!

உங்கள் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தன்பங்குக்கு விளாசுகிறார். “தமிழருக்கு என்ன செய்வோமெனக் கூற மகிந்த, மைத்திரி யாருக்கும் திராணியில்லை” என்று ஒரே போடாகப் போடுகிறார்!

அவர்களுக்கெதுக்குத் திராணி? தமிழ் மக்களுக்கான தன்னாட்சித் தீர்வுக்கு உயிரைக்கொடுத்துப் பாடுபடுவோம்; வடக்கிலிருந்து இராணுவத்தை முற்றாக வெளியேற்றுவோம்; போர்க்குற்ற விசாரணையை நடத்துமாறு சர்வதேசத்தைக் கோரி தமிழ் மக்களுக்கு ஏறக்குறைய சமஷ்டித் தீர்வை எடுத்துத் தருவோம் என்றெல்லாம் தேர்தல் வாக்குறுதியை அளித்துக் கதிரைகளைப் பிடித்தவர்கள் அவர்களா?

அதையெல்லாம் மக்களுக்குச் செய்து காட்டுகிறோம் எனச் சொல்லிப் பதவிகளுக்கு வந்த நீங்களல்லவா அதற்கான துரும்பைக் கூட அசைக்கத் திராணியற்றவர்களாக இருக்கிறீர்கள்? நீங்களல்லவா தமிழ் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டும்?

தமிழ் மக்களது பிரச்சினைகளைத் தீர்க்கிறோம் என்று அவர்களது ஆணையைப் பெற்று வைத்திருப்பவர்கள் நீங்கள். உங்களால் முடியவில்லை – திராணியில்லை என்றால் பதவிகளை விட்டு விலகுவதை விட்டுவிட்டு, மகிந்தவும், மைத்திரியும், ரணிலும், சந்திரிகாவும், சஜித்தும், பொன்சேகாவும் திராணியற்றிருக்கிறார்கள் என்று மக்களுக்குக் கதையளந்து கொண்டிருக்கிறீர்களே... வெட்கமாக இல்லையா?

- ஆசிரியர்

# இலங்கைத் தூதுவர்கள் கொழும்புக்கு அழைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக, வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கைத் தூதுவர்கள் மற்றும் தூதரக அதிகாரிகள் சிலர் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தினால், அரசியல் செல்வாக்கில் நியமிக்கப்பட்ட தூதுவர்களே இவ்வாறு கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்ரேலியாவுக்கான தூதுவர் அட்மிரல் திசார சமரசிங்க, ஜப்பானுக்கான தூதுவர் அட்மிரல் வசந்த கரன்னகொட, சிட்னியில் உள்ள தூதரக அதிகாரி பந்துல ஜெயசேகர, கன்பராவில் உள்ள துணைத் தூதுவர் லக்ஷ்மன் ஹுலுகல்ல, ரஷ்யாவுக்கான தூதுவர் உதயங்க வீரதுங்க ஆகியோரே கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளது பற்றிய விபரங்களை இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிடாமல் மறைத்து வருகிறது.

வெளிநாடுகளில் அரசியல் ரீதியாக நியமனம் பெற்ற இராஜதந்திரிகளில் மேலும் ஒருதொகுதியினர் விரைவில் கொழும்புக்கு அழைக்கப்படவுள்ளனர்.

அதேவேளை, ஜனாதிபதி தேர்தல் முடிவடையும் வரையில், வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கைத் தூதரக அதிகாரிகள் விடுமுறையில் செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ள இராஜதந்திரிகள் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

## 35,000 சுற்றி வளைப்புக்கள் 90 மில்லியன் அபராதம்

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 35,000 சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இவற்றின் மூலம் 90 மில்லியனுக்கும் அதிகமான அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சுக் தெரிவித்துள்ளார்.

காலாவதியான பொருட்கள் விற்பனை செய்தல், நுகர்வுக்குத் தகுதியற்ற பொருட்களை விற்பனை செய்தல், காலாவதி திகதியை மாற்றியமைத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் இந்த சுற்றி வளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் விரிவான சுற்றி வளைப்புக்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் நுகர்வோர் அதிகார சபை கூறியுள்ளது.

# தேர்தல் முறையில் மாற்றம் திட்டம் வகுக்கிறது அரசாங்கம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறும் பட்சத்தில் தேர்தல்முறைமையில் மாற்றங்களை உடனடியாக மேற்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சர் தினேஸ் குணவர்தன தலைமையிலான நாடாளுமன்ற குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள தேர்தல் முறையை அரசாங்கம் நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளது. குறிப்பிட்ட கலப்பு தேர்தல் முறை சகல தேர்தல்தொகுதிகளும் தங்களுக்கென உறுப்பினர் ஒருவரை கொண்டிருப்பதை உறுதிசெய்யும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்காது, என்ற அடிப்படையிலேயே ஆளும் கட்சி இந்த மாற்றத்தை மேற்கொள்ள எண்ணியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது ஆளும் கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ள போதிலும், எதிர்வரும் தேர்தலில் அதற்கு இவ்வாறான பெரும்பான்மை கிடைக்காது என்ற கருத்து காணப்படுகின்றது.

இதேவேளை எதிரணியினரும் இவ்வாறான தேர்தல் மாற்றம் குறித்து அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊழல்வாதிகளுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும்

## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

ஊழல், மோசடிகளில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டும் என சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது மற்றும் தேசிய பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை வழங்குவது போன்ற விடயங்களை ஆளும் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்குமாறு தான் யோசனை முன்வைத்துள்ளதாகவும் திஸ்ஸ விதாரண மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மாகாணமட்ட விஞ்ஞானப் போட்டி: அருணோதய மாணவன் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் நடைபெற்ற மாகாணமட்ட விஞ்ஞான வினாடி வினாப்போட்டியில் அருணோதயக் கல்லூரி மாணவன் மதிவதனன் லட்சிகன் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

யாழ்.இந்துக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி போன்ற தேசியப் பாடசாலை ம்ாணவர்களுடன் போட்டியிட்டு முதலாம் இடத்தினைப் பெற்றமை சாதனைக்குரியதாகும்.

அருணோதயக்கல்லூரி வரலாற்றில் இம்மாணவனே முதலாவதாக மாகாணமட்ட விஞ்ஞான வினாடிவினாப் போட்டியில் முதலாம் இடம் பெற்றவர் என்ற வரலாற்றுப் பதிவினையும் பெறுகின்றார். இவருக்கான வழிப்படுத்தலை விஞ்ஞான பாட ஆசிரியர் சுமந்திரன் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கட்டாக்காலியாக திரியும் நாய்களுக்கு கருத்தடை

தீவகத்தில் நாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்தும் நோக்கோடு வேலணைப் பிரதேசசபையினால் அதன் ஆளுகைக்குட்பட்ட கிராமங்களான, மண்டைதீவு, அல்லைப்பிட்டி-மண்கும்பான், வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய கிராமங்களில் வளர்ப்பு நாய்கள் மற்றும் கட்டாக்காலி நாய்கள் அனைத்துக்கும் கருத்தடை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வேலணைப் பிரதேசசபையின் ஊடாக வேலணை மிருக வைத்தியர்களினால் இந்நாய்களுக்கான கருத்தடை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அல்லைப்பிட்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை பகல் முழுவதும் 100 இற்கும் மேற்பட்ட நாய்களுக்கு கருத்தடை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

# ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுப் பகிர்வு பற்றி - I

வித்தியாதரனின், அனுபவப் பதிவில், புலிகள் குறித்து ஒரு மென்போக்கான அணுகு முறையையும் ஏனைய அமைப்புக்கள் தொடர்பில் காட்டமான ஒரு பார்வையும் தெளிவாக பார்க்கக் கூடியதாக இருக்கிறது. உதாரணமாக பிரம்பால் அடிப்பதற்கும் மயிலிறகால் அடிப்பதற்கும் வித்தியாசமுண்டு. இரண்டும் அடிதான்-ஒன்று வலி நிறைந்தது மற்றையதும் அடிதான். ஆனால் உண்மையில் அது ஒரு தடவல்.






*அரசியல் பத்தி எழுத்தாளர் யதீந்திரா 30-11-2014 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மூத்த ஊடகவியலாளர் என்.வித்தியாதரனின் "என் எழுத்தாயுதம்" நூல் வெளியீட்டில் ஆற்றிய உரை.*

வித்தியண்ணனின் ஊடகத்துறை அனுபவம் என்பது கிட்டத்தட்ட எனது வயது. அவர் 1979ஆம் ஆண்டு ஊடகத்துறைக்குள் பிரவேசித்திருக்கின்றார் தினபதியின் ஊடாக. அந்த வகையில் வித்தியண்ணனின் "என் எழுத்தாயுதம்" என்னும் இந்த நூல் ஒரு ஊடகவியலாளரின் சுமார் 35 வருடகால அனுபவங்களின் ஒரு பகுதியாகும்.

வித்தியாதரன் என்னும் ஊடகவியலாளரின் ஊடகத்துறையின் மீது காண்பித்த அர்ப்பணிப்பையும், ஈடுபாட்டையும் எவரும் கேள்விக்குள்ளாக்க முடியாது - அந்தளவிற்கு மிகவும் நெருக்கடியான காலத்தில், பல்வேறு சவால்களுக்கு மத்தியில், பலதரப்பட்ட அதிகார சக்திகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டு பணியாற்றிய ஒருவர் என்னும் வகையில் அவரது அனுபவங்கள் முக்கியமானவை.

இன்றைக்கும் உதயன் என்னும் ஒரு பத்திரிகை யாழ்ப்பாணத்தில் வெளிவந்து கொண்டிருக்கிறதென்றால் அதற்கான காரணம் வித்தி என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. இந்த நூலில் அவர் பதிவுசெய்திருக்கும் தகவல்களின் அடிப்படையில்தான் நான் இதனை குறிப்பிடுகிறேன்.

எல்லாவற்றுக்கும் மேல் இத்தனை நெருக்கடியான காலகட்டத்தில் இந்த மண்ணில் கால்பதித்திருந்து பணியாற்றுவதென்பதே மிகப் பெரிய அரசியல் பணியாகும். அப்படியொரு அர்ப்பணிப்புமிக்க பணியை வித்தியண்ணன் தன்னுடைய துறையில் மேற்கொண்டிருந்திருக்கிறார் என்பது இந்த நூலில் ஒவ்வொரு பக்கங்களிலும் தெரிகிறது.

இந்த நூலில், வித்தியின் அனுபவங்களாக அவர் பதிவுசெய்திருக்கும் தகவல்களின் சரி பிழை பற்றி பேசுவதற்கான தகுதி எனக்கில்லை. காரணம் நான் யாழ்ப்பாணத்திற்கு வெளியில் இருந்த ஒருவன். இந்த நூலில் விபரிக்கப்பட்டிருக்கும் காலகட்டத்தில் நான் யாழ்ப்பாணத்தை எட்டிப்பார்த்தது கூட இல்லை. எழுதப்பட்ட குறிப்புக்கள், சில நண்பர்களுடனான தொடர்பு - இவற்றின் மூலமாக மட்டுமே விடயங்களை அறிந்துகொண்டவன்.

எனவே இங்கு பதிவுசெய்யப்பட்டிருக்கும் சில தகவல்கள் ஒரு ஊடகவியலாளரின் அனுபவம் என்னும் வகையில் அதன் சரி பிழைகளுக்குள் நான் செல்லவில்லை. ஒருவேளை வித்தியண்ணன் குறிப்பிட்டிருக்கும் காலகட்டத்தோடு தொடர்பானவர்கள் இவற்றை மறுதலிக்கலாம் அல்லது ஏற்கலாம்.

எனவே நான் இந்த நூலை வாசித்த போது எனக்குள் எழுந்த சில அபிப்பிராயங்கள், கேள்விகளை அடியொற்றி சில விடயங்களை இங்கு பகிர்ந்துகொள்ளலாமென்று எண்ணுகிறேன். என்னுடைய அபிப்பிராயங்கள் இரண்டு வகையானவை - ஒன்று, அரசியல் சார்ந்தது - மற்றையது ஊடகத்துறை சார்ந்தது.

வித்தி தன்னுடைய அனுபவங்களை நூலாக்கியிருக்கின்ற இன்றைய காலம் முற்றிலும் வேறானது. இது, கடந்த காலத்தை காய்தல் உவத்தலின்றி பார்க்கப்பட வேண்டியகாலம். அப்படி பார்க்க விரும்பாதவர்கள் கடந்தகாலம் குறித்து எதையுமே பேசாமலும் விடலாம்.

இந்த நூல் ஒரு ஊடகவிலாளரின் அனுபவங்கள் என்பதற்கு அப்பால் ஒரு காலகட்ட வரலாறை அடுத்த தலைமுறையிடம் சேர்ப்பிக்கும் ஒரு ஆவணமும் கூட. அந்த வகையில் இது ஒரு வரலாற்றுப்பதிவு.

இங்கு வித்தி தன்னுடைய அனுபவங்களாக பல்வேறு இயக்கங்கள் பற்றிய தகவல்களை பதிவுசெய்திருக்கிறார். ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட், டெலோ மற்றும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி பற்றி பேசியிருக்கிறார். விடுதலைப் புலிகள் பற்றியும் பேசியிருக்கிறார்.

ஆனால், ஏனைய இயக்கங்கள் பற்றி தன்னுடைய அனுபவங்களை குறிப்பிடும் போது, வித்தியாதரன் பயன்படுத்தியிருக்கும் சொற்பிரயோகங்களும் புலிகள் பற்றி அவரது அனுபவப் பதிவுகளில் கையாண்டிருக்கும் சொற்பிரயோகங்களும், அவரது சார்பு நிலையை காட்டிவிடுகிறது.

அதாவது ஏனைய அமைப்புக்கள் பற்றி குறிப்பிடும் போது பல இடங்களில் அராஜகம், அடாவடித்தனம், துணைப்படை, அரசபடைகளுடன் ஒட்டியிருந்தவர்கள் - இப்படியான சொற்பிரயோகங்களின் ஊடாகத்தான் ஏனைய இயக்கங்கள் பற்றி குறிப்பிடுகின்றார்.

குறிப்பாக அவரது ஊடகத்துறை அனுபவத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப் யாழ் குடாநாட்டில் நிலைகொண்டிருந்த காலத்தில் - யாழில் இயங்கிய ஊடகங்கள் எதிர்கொண்ட அச்சுறுத்தல்கள் நெருக்கடிகள் போன்று வேறு எந்தவொரு காலத்திலும் அப்படி நிகழ்ந்ததில்லை என்றவாறு ஒரு வாசகர் புரிந்துகொள்ளக் கூடியவாறு அவருடைய அனுபவங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன.

இந்த தகவல்கள் அனைத்தையும் தொகுத்துப் பார்க்கும் போது, வித்தியின், அனுபவப் பதிவில், புலிகள் குறித்து ஒரு மென்போக்கான அணுகு முறையையும் ஏனைய அமைப்புக்கள் தொடர்பில் காட்டமான ஒரு பார்வையும் தெளிவாக பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

உதாரணமாக பிரம்பால் அடிப்பதற்கும் மயிலிறகால் அடிப்பதற்கும் வித்தியாசமுண்டு. இரண்டும் அடிதான் - ஒன்று வலிநிறைந்தது: மற்றையதும் அடிதான் ஆனால் உண்மையில் அது ஒரு தடவல். தன்னுடைய அனுபவங்களின் வழியாக ஏனைய அமைப்புக்கள் அனைத்தையும் பிரம்பால் அடித்துவிட்டு, புலிகளை மயிலிறகால் தடவிச் சென்றிருக்கிறார்.

புலிகளின் கடும்போக்கான நடவடிக்கைகள் எதனையும் அனுபவிக்கவேண்டிய தேவை வித்தியாதரன் என்னும் ஊடகவியலாளனுக்கு இருக்கவில்லை. வித்தியாதரன், உதயன் - சுடரொளி ஆசிரியராக இருந்த காலத்தில் பிரபாகரனின் மாவீரர்தின உரையை வரி பிசகாமல் பிரசுரித்திருக்கின்றார். அதாவது 1990 தொடக்கம் 2008 வரையில். ஆனால் அந்த உரைகளை விமர்சித்து, இதில் பிரபாகரன் இப்படிச் சொல்லுவது தவறு, இப்படிச் சொல்லியிருக்கக் கூடாது, என்று குறிப்பிட்டிருந்தால் வித்தியின் இடம் என்னவாக இருந்திருக்கும். உதயன் பத்திரிகையின் இடம் என்னவாகியிருக்கும்.

இரண்டு இடங்களில்தான் புலிகள் பற்றி கொஞ்சம் வெளிப்படையாக பேசியிருக்கிறார் - ஒன்று, முரசொலி பத்திரிகையின் மீதான தடை விவகாரம் - இரண்டு, மதிமுகராஜன் என்பவரை புலிகள் படுகொலை செய்தமையை அவர் கண்டித்து உதயனில் செய்தி வெளியிட்டது. அதுவும், தான் அவ்வளவு சொன்ன பிறகும் சுட்டுப் போட்டாங்களே என்னும் ஆதங்கம்தான் அங்கும் தெரிகிறது.

உண்மையில் இங்கு தரப்பட்டிருக்கும் தகவல்கள் - வித்தியின் அனுபவங்களாக இருக்கலாம் ஆனால் இங்கு ஒரு பிரச்சினையிருக்கிறது. புலிகளின் கடும்போக்கான நடவடிக்கைகள் எதனையும் அனுபவிக்கவேண்டிய தேவை வித்தியாதரன் என்னும் ஊடகவியலாளனுக்கு இருக்கவில்லை.

ஒருவேளை, வித்தி உதயன் சுடரொளி ஆகியவற்றின் ஆசிரியராக இருந்த காலத்தில், பிரபாகரனின், பொட்டு அம்மானின் நடவடிக்கைகளை விமர்சிப்பவராக, கேள்விக்குள்ளாக்குபவராக இருந்திருந்தால், அவருடைய அனுபவங்கள் என்னவாக இருந்திருக்கும்?

வித்தி, உதயன் சுடரொளி ஆசிரியராக இருந்த காலத்தில் பிரபாகரனின் மாவீரர்தின உரையை வரிபிசகாமல் பிரசுரித்திருக்கின்றார். அதாவது 1990 தொடக்கம் 2008 வரையில். ஆனால் அந்த உரைகளை விமர்சித்து, இதில் பிரபாகரன் இப்படிச் சொல்லுவது தவறு, இப்படிச் சொல்லியிருக்கக் கூடாது, என்று குறிப்பிட்டிருந்தால் வித்தியின் இடம் என்னவாக இருந்திருக்கும். உதயன் பத்திரிகையின் இடம் என்னவாகியிருக்கும்.

இந்த நூலை வாசித்த போது நான் குறித்துக்கொண்ட பிறிதொரு விடயம் - வித்தியண்ணன் தன்னுடைய அனுபவங்களை பதிவுசெய்திருக்கும் அதேவேளை, தன்னுடைய அபிப்பிராயங்கள் சிலவற்றையும் இங்கு செருகியிருக்கிறார். அவ்வாறு அபிப்பிராயங்கள் செருகப்படுகின்றபொழுது, உண்மையில் வித்தியாதரன் என்பவர் ஒரு ஊடகவியலாளர் என்னும் எல்லையை தாண்டி அரசியல்வாதியாக மாறிவிடுகிறார். அப்படிச் செருகப்பட்ட ஒரு கருத்தை நான் உங்களுக்கு வாசித்தளிக்கிறேன்.

**"ஒரு புறம் இராணுவ அச்சுறுத்தல்கள் என்றால் மறுபுறம் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் தமிழ்க் குழுக்களின் அட்டூழியங்கள், அச்சுறுத்தல்கள் அராஜகங்களும் கொஞ்ச நஞ்சமல்ல. அன்று அந்த நிலையில் நமது இனம் அல்லற்பட்டுக் கொண்டிருந்தபோது. அரசுப் படைகளின் நடவடிக்கைகளுக்கு ஒத் தூதி, ஒத்துழைத்த பல குழுக்களும் இன்று எப்படியோ தங்களுக்குப் பிராயச்சித்தம் செய்துகொண்டு தமிழ் கூட்டமைப்புக்குள் ஐக்கியமாகிவிட்டன. ஈ.பி.டி.பி மட்டும் வெளியில் நிற்கிறது.** -451"

இப்படியொரு கருத்தை வித்தியண்ணன் இன்றைய சூழலில் ஏன் குறிப்பிடுகின்றார் என்பது அவருக்கு மட்டும்தான் தெரிந்திருக்கும். ஆனால் இந்த நூலை வாசிக்கும் ஒருவர் இப்படியொரு கருத்தை உருவாக்குவதற்காகத்தானா, ஏனைய இயக்கங்களின் கடந்த காலத்தைப் பற்றி வித்தி பேசியிருக்கின்றார் என்னும் கேள்வியையும் எழுப்பிவிடக் கூடும்.

ஆனால் வித்தியண்ணனின் இந்த கருத்தை, அவர் இந்நூலில் பதிவு செய்திருக்கும் பிறிதொரு தகவலின் ஊடாக நான் மறுதலிக்க முற்படுகின்றேன். இந்த நூலில் மிதவாத பாரம்பரியத்திலிருந்து வந்த அரசியல் தலைவர்கள் பற்றியும் வித்தியண்ணன் பேசியிருக்கிறார். 186 - 190 வரையான பக்கங்களில் அதனை நீங்கள் காணலாம்.

வித்தியண்ணனின் பார்வையில் இந்த மிதவாத தலைவர்கள் என்பவர்கள் 'காட்போர்ட் சண்டியர்கள்' ஆவர். இது ஒரு புதுசொற்பிரயோகம். வித்தி இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

**"வாக்கு வேட்டைக்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் மேற்கொண்ட உசுப்பேற்றலின் பின்னால் புதைந்துகிடந்த செயற்திறனின்மையை விளங்கிக் கொள்ளாத இளைஞர்கள் கூட்டணித் தலைவர்களை விடுதலை நாயகர்களாக கற்பனை செய்து கொண்டனர்."**

(மீதி நாளை)

# நிறைவேற்று ஜனாதிபதி முறையே 13 ஆவது திருத்தத்திற்கு பாதுகாப்பு

## கூறுகிறார் மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிரான சிறந்த பாதுகாப்பு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை என முன்னாள் பிரதம நீதியரசர் சுப்பையா சர்வானந்தா பகிரங்கமாக ஒரு முறை தெரிவித்திருந்தார் எனவும நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லா தொழிப்பது ஆபத்தானது என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டம் அமுலில் இருக்கும் போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லா தொழிப்பது மிகவும் ஆபத்தானது.

மாகாண ஆளுநர்கள் மற்றும்



பிரதம செயலாளர்களை தெரிவு செய்வதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு காணப்படுவதாகவும் இதன் மூலம் மாகாணங்கள் தன்னிச்சையாக இயங்குவது தடுக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார பொறிமுறைமை இருந்திருக்காவிட்டால் புலிகளுக்கு எதிராக யுத்தம் வெற்றிகரமாக முடிந்திருக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன ஒரே இரவில் ஆளும் கட்சியிலிருந்து விலகிச் சென்றிருக்க முடியாது எனவும், நீண்ட காலமாக எதிர்க் கட்சிகளுடன் இரகசியத் தொடர்புகளைப் பேணிக்கொண்டே ஜனாதிபதியுடன் நெருங்கிப் பழகியிருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2006ஆம் ஆண்டு கட்சி தாவிய போது அது குறித்து ரணில் விக்ரமசிங்கவிடம் தாம் நேரடியாகவே கூறியதாக மகந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

# தனது வெற்றி குறித்து தவறாக கூறுகிறார் ஜனாதிபதி

## ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

ஐரோப்பா உட்பட பல நாடுகளில் உள்ள இலங்கை அரசியல் கட்சிகளின் கிளைகளில் பெரும்பாலானவை மைத்திரிபால சிறிசேனவுக்கே தமது ஆதரவை தெரிவித்துள்ளதாக முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் தான் 22 இலட்சம் மேலதிக வாக்குகளினால் வெற்றிபெறுவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இது அவரினால் தவறாக தெரிவித்த ஒரு கருத்து என நான் நினைக்கின்றேன். அவர் தேர்தலில் பெறவுள்ள மொத்த வாக்குகளையே இவ்வாறு கூறியுள்ளார்.

அரச புலனாய்வுத் துறை



அறிக்கையின் படி 56 வீத வெற்றி வாய்ப்பு மைத்திரிக்கு உள்ளதாக குறிப்பிட்டுள்ளது இராணுவ புலனாய்வு அறிக்கையின் படி 55 வீத வெற்றி வாய்ப்பு மைத்திரிக்கு என தெரியவந்துள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரின் அறிக்கையின் படி 56 வீத வெற்றி வாய்ப்பு மைத்திரிக்கு உண்டு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சகல அறிக்கைகளும் ஜனாதிபதியிடம் உள்ள பொது வேட்பாளர் அரசாங்கத்திலிருந்து வெளியேறிய சில நாட்களில் தான் இந்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது. பொது வேட்பாளருக்குள்ள ஆதரவு இதன் பிறகு இன்னும் அதிகரித்துள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# ஊவாமாகாண சபை கலைக்கப்படுமா?



(கொழும்பு)

சசீந்திர ராஜபக்ஷ தலைமையிலான ஊவா மாகாணசபை எதிர்வரும் வாரத்தில் கலைக்கப்படும் என்று மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஹரின் பெர்னாண்டோ எச்சரித்துள்ளார்.

இதற்கான சாதகமான நிலை ஆளும் கட்சியில் இருந்து தமக்கு கிடைத்துள்ளதாக ஹரின் குறிப்பிட்டுள்ளார்.

எனவே ஆளும் கட்சியின் ஆதரவுடன் தாம் ஊவா மாகாண சபையை கலைக்கப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் தற்போது இடம் பெறுவதாக அவர் கூறியுள்ளார். கலைக்கப்படலாம் என்ற அச்சத்தில், ஊவா மாகாணசபை கடந்த வாரத்தில் அதிக குளிர் என்ற காரணத்தை காட்டி, ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில் ஆளும் கட்சியினரின் உதவியுடன் ஊவா மாகாண சபையை மீண்டும் திறக்கப் போவதாக ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் மீண்டும் பயங்கரவாதம்; எச்சரிக்கை விடுக்கிறார் கோத்தாபய

(கொழும்பு)

மீண்டும் நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்கக் கூடிய அபாயம் காணப்படுவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பயங்கரவாதம் இல்லா தொழிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்தும தேசியப் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் நீடித்து வருவதாகவும் விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாகவும், கடும்போக்கு அமைப்புக்களுடன் தொடர்பு பேணப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் சில அரசியல் சக்திகள் தொடர்ந்தும் பிரிவினைவாத கொள்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் சில தரப்பினர் நாட்டில் மீண்டும் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க முயற்சித்து வருவதாகவும் குறிப்பிடும் அவர்,

ஜனநாயகக் கட்டமைப்பில் இருந்து கொண்டே பிரிவினைவாத கொள்கைகள் கோட்பாடுகளை சில தரப்பினர் முன்னெடுத்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட



தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் பிரிவினைவாதத்தை கைவிட்டுள்ளதாகவும், புனர்வாழ்வு அளிக்கப்படாத போராளிகள் தொடர்ந்தும் பிரிவினையை போசிப்பதாவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பேராசிரியர்கள் நடாத்திய ஆய்வின் மூலம் இந்த தகவல் கிடைக்கப்பெற்றது எனவும் தெரிவித்துள்ளார். புனர்வாழ்வு அளிக்கப்படாத புலி உறுப்பினர்கள் சர்வதேச அமைப்புக்களுடன் இணைந்து பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட முயற்சிப்பதாகவும் அவர் மேலும தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி தேர்தலுக்காக 2.5 பில்லியன் ரூபா செலவு

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதி தேர்தலுக்காக பல பில்லியன் ரூபாய்கள் செலவிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல்கள் திணைக்கள மதிப்பீட்டின்படி ஜனாதிபதி தேர்தலுக்காக 2.5 பில்லியன் ரூபாய்கள் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் திறைசேரியின் மதிப்பீட்டின்படி திணைக்களங்கள் மற்றும் மறைமுக செலவுகளை சேர்த்து 10.5 பில்லியன் ரூபாய்கள் செலவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலரி மாளிகையில் நாள்தோறும் நடாத்தப்படும் அரச சேவையாளர்களுக்கான விருந்துபசாரங்களுக்காக 750 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதனைத் தவிர தேர்தல் வாக்கெண்ணும் பணிகளின் போது மாத்திரம் 1.5 பில்லியன் ரூபாய்கள் செலவாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# கஞ்சா கலந்த மோதகம் இருவர் பொலிஸாரால் கைது

கஞ்சா கலந்த சுமார் 10 கிலோ கிராம் நிறையுடைய 745 மதன மோதக உருண்டைகளுடன் 34 மற்றும் 52 வயதுகளையுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மத்துரட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதியபெலேல்ல பிரதேசத்தில் வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், லொறியொன்றை சோதனைக்கு உட்படுத்திய போதே இவ்விருவரையும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட 34 மற்றும் 52 வயதுகளையுடைய இருவரும் எம்பிலிப்பிட்டிய மற்றும் பெல்மதுளை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அவ்விருவரையும் வலப்பனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சிவனொளிபாத மலை யாத்திரை ஆரம்பம்



2015ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாதமலை யாத்திரைக்கான பருவகாலம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பூரணை தினத்தன்று ஆரம்பமாகியது.

இரத்தினபுரி பெல்மதுளை கல்பொத்த ரஜமகா விகாரையிலிருந்து புனித விக்கிரகங்கள் நல்லதண்ணி பாதை வழியாக மலையுச்சிக்கு எடுத்து செல்லப்பட்டதாக சிவனொளிபாதமலை நாயக்க தேரர் பெங்கமுவே தம்மதின்ன தெரிவித்தார்.

மேற்படி சிவனொளி பாத மலைக்கு வருகை தரும் யாத்திரிகர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை முன்னிட்டு நல்ல தண்ணீர் நகரில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்துக்கு மேலதிகமாக சீத்தகங்குலதன்ன, இந்திக்கட்டுபான, மழுவ முதலான இடங்களில் தற்காலிக பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படவுள்ளன.இதனை முன்னிட்டு அட்டன் நல்லதண்ணீர் புகையிரத இணைப்பு பஸ் சேவை அட்டன் டிப்போவினால் நடாத்தப்படவுள்ளது.

இரத்தினபுரி வழியாகவும், அட்டன் வழியாகவும் சிவனொளிபாதமலைக்கான யாத்திரையை மேற்கொள்ள முடியும். மது அருந்த தடைசெய்யப்பட்டுள்ளது. ஒழுங்கான முறையில் நடந்து கொள்ள வேண்டும் சரியான ஆடை அணிய வேண்டும் எந்தவிதமான இசைக்கருவிகளையும் கொண்டு செல்ல முடியாது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பக்தர்கள் மற்றும் பார்வையாளர்கள் என பல எண்ணிக்கையிலான பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# அரசாங்கத்தின் வாக்குறுதியை நம்பமறுக்கும் ஹெல உறுமய

## அரசியலமைப்பு திருத்தம்

(கொழும்பு)

அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக ஆளும் கட்சியினால் அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதி நம்பக்கூடியதல்ல என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளதாக அரசாங்கம் தற்போது பிரசாரம் செய்து வருகின்றது. எனினும் இந்தப் பிரசாரத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

போர் வெற்றியின் பின்னர் அரசியல் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கத்திற்கு வாய்ப்பு காணப்பட்டது.

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் காணப்பட்டது.இந்தப் பலத்தைப் பயன்படுத்தி அரசியல் கட்டமைப்பில் மாற்றங்களைச் செய்ய அரசாங்கம் முனைப்பு காட்டவில்லை.அரசியல் அமைப்பில் திருத்தங்கள் எந்த வகையில் செய்யப்பட்டாலும் அதற்கு ஜாதிக ஹெல உறுமய பூரண ஆதரவளிக்கும்.

அரசாங்கம் அரசியல் அமைப்பில் திருத்தம் செய்யும் என நம்ப முடியாது. தேர்தலின் பின்னர் அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளதாக ஆளும் கட்சியின் முக்கிய அமைச்சர்கள் வாக்குறுதி அளித்து வருகின்றனர்.

குறிப்பாக நிமல் சிறிபால டி சில்வா, டளஸ் அழப்பெரும, சுசில் பிரேமஜயந்த ஆகியோர் அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் வாக்குறுதி அளித்து பிரசாரம் செய்து வருவதாக சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தொழில் வாய்ப்பை வழங்கவேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(கிளிநொச்சி)

வாழ்வாதார உதவிகளை மக்கள் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள வேண்டுமாயின் மக்களின் அர்ப்பணிப்புமிக்க உழைப்பு அவசியம் என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



கடந்த வியாழக்கிழமை பூநகரி மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்து உரையாற்றும்போதே அவர் இவவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், மீள்குடியேற்ற காலத்தில் வாழ்வியலுக்கான எவ்வித அடிப்படை வாய்ப்புகளுமற்ற நிலையில் குடியேறிய மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. அவற்றில் பல உதவிகள் மக்களின் விருப்புக்கு மாறாக வழங்கப் பட்டதனால் பூரண பயனை மக்கள் பெறமுடியாது போனது.

மீள்குடியேற்றம் நடை பெற்று ஐந்து வருடங்களை எட்டுகின்ற நிலையில் மக்களுக்கான தொழில் துறைகள் அனைதது்ம் விருத்தி செய்யப்பட்டு விவசாய மேம்பாட்டுக்கான வாய்பபுக்கள் கூட ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு மக்கள் தமது வாழ்வாதாரத்தை சுயமாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய சூழல் உருவாக்கப் பெற்றிருக்கின்றது.

எனவே, இந்த நிலையில் உழைக்கும் ஆற்றல் கொண்டவர்களும் தொடர்ந்து வாழ்வாதார உதவிகளை எதிர்பார்த்து காத்திருப்பது சமூகத்தின் மேம்பாட்டிற்கு தடையாகவே அமையும். அதேவேளை, தொடர்ந்து வாழ்வாதார உதவிகள் இலவசமாக வழங்கப்படுவதும் தவறான நடைமுறையாகவே நாம் பார்க்கின்றோம். ஏனெனில் அது சமூகத்தின் உழைப்புத் திறனை மழுங்கடித்துவிடும். இருப்பினும் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் நிரந்தர வருமானத்தை வழங்கப் பெறக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நாம் அடுத்த கட்ட அபிவிருத்தி பயணத்தை வகுத்திருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன், பூநகரிப் பிரதேச செயலர் சத்தியசீலன், பூநகரிப் பிரதேச சபை உறுப்பினர் குகேந்திரன் மற்றும் வாழ்வின் எழுச்சித் திட்ட உத்தியோகத்தர்கள், முழங்காவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகள் ஏனைய கிராமங்களைச் சேர்ந்த கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பயனாளிகள் மக்கள் எனப் பலர் கலந்து கொணடனர்.

# துன்னாலையில் வாள்வெட்டு இளைஞர் படுகாயம்

(துன்னாலை)

இனந்தெரியாதோரின் வாள் வெட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிகிழமை இரவு 8 மணியளவில் துன்னாலைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

பிரஸ்தாப இளைஞர் தனது அக்காவின் வீட்டில் இருந்து தனது வீட்டுக்குச் சென்ற வேளையில் ஐவர் அடங்கிய இனந்தெரியாத குழுவினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளதுடன் சிகிச்சைக்காக இளைஞர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (18)

# கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்திற்கு வேலி அமைக்க நிதி ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்திற்கு சுற்றிவர வேலி அமைப்பதற்கு 260 000 ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச செயலர் ஊடாக இந்தப் பணி முன்னெடுக்கப்படவுள்ளது. 2012 ஆம் ஆண்டில் மாகாண விசேட நிதி திட்டத்தின் கீழ் 30 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு மாவட்ட அலுவலகத்தின் முதற்கட்டக் கட்டுமானம் நடைபெற்றது.

2013 ஆம் ஆண்டில் யுனிசெவ் அமைப்பின் நிதி மூலமாக 20 இலட்சம் ரூபா வழங்கப்பட்டு இரண்டாம் கட்ட கட்டுமானம் நடைபெற்றது.

இந்த கட்டடத்தைப் பூரணப்படுத்த மேலும் நிதி தேவைப்படுகிறது. இந்த நிலையில் தற்போது காணியிற்கு வேலியமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (90)





கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் 30 பொலிஸாருக்கு நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற இவ் வைபவத்தில் கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திரன் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோர் உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளனர். (29)

# நவசக்தி முன்பள்ளியின் வருடாந்த பரிசளிப்பு விழா

(கைதடி)

கைதடி நவபுரம் நவசக்தி முன்பள்ளியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வுகளும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு எருதிடல் அ.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலைய தலைவர் சி.மன்மதராசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.கிருஸ்ணகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத் தலைவர் இ.கந்தசாமி, சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க தலைவர் கி.பூபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக கைதடி பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி.சுபத்திரா தனபாலசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (90)

# சனிப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?



## துலாம்

**(சித்திரை 3,4 ஆம் பாதம் சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதம்)**

### தீமை செய்பவர்களுக்கும் நன்மை செய்யும் துலாராசிக்காரர்களே!

அல்லது செய்தவர்க்கும் நல்லதே செய்யும் நீங்கள், நாலும் தெரிந்தவர்கள். இதுவரை உங்கள் ராசிக்குள் அமர்ந்து ஜென்மச சனியாக இருந்து உங்களை வெடித்து சிதற வைத்தார். எப்போதும் பிரச்சினையிலேயே மூழ்கி கிடந்தீர்கள் இப்படி உங்களை வாட்டி வதைத்த சனிபகவான் இப்பொழுது 16.12.2014 முதல் 17.12.2017 வரை உள்ள காலக்கட்டங்களில் உங்கள் ராசியை விட்டு விலகி பாதச் சனியாக அமர்ந்து பலன் தரப் போகிறார். உங்களின் பிரபல யோகாதிபதியான சனிபகவான் 2ஆம் வீட்டிற்கு வந்தமர்வதால் பெரிய நோய் இருப்பதைப் போன்ற பிரம்மை நீங்கும்.

வீண் சந்தேகத்தால் பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்று சேருவீர்கள். இனி அந்யோன்னியம் அதிகரிக்கும். மற்றவர்களின் மனநிலையை உணரத் தொடங்குவீர்கள். என்றாலும் பாதச்சனியாக வருவதால் வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். எதிர்மறை எண்ணங்களுடன் பேசுபவர்களின் நட்பை தவிர்ப்பது நல்லது.

### சனிபகவான் நட்சத்திர சஞ்சாரப் பலன்கள்

16.12.2014 முதல் 24.01.2015 வரை மற்றும் 30.04.2015 முதல் 13.6.2015 வரை மற்றும் 06.9.2015 முதல் 17.10.2015 வரை உங்கள் திருதியாதிபதி-சஷடமாதிபதி குருவின் சாரத்தில் விசாக நட்சத்திரம் 4ஆம் பாதம் 2ஆம் வீட்டில் சனி செல்வதால் எதிர பார்த்த வேலைகள் முடியாவிட்டாலும் எதிர்பாராத சில காரியங்கள் முடிவடையும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள்.

14.6.2015 முதல் 5.9.2015 வரை உங்கள் ராசிக்குள் ஜென்மச் சனியாக துலாம் ராசி விசாகம் நட்சத்திரம் 3ஆம் பாதத்தில் சனி செல்வதால் இக்காலகட்டத்தில் விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு நெஞ்சு எரிச்சல், தலைச்சுற்றல், அல்சர், வாயுக் கோளாறால் வயிற்று வலி, வீண் விரையம், விரக்தி, ஏமாற்றம் வந்துப் போகும். யாரையும் யாருக்கும் சிபாரிசு செய்யாதீர்கள்.

30.04.2015 முதல் 01.08.2015 வரை குருபகவானின் விசாகம் நட்சத்திரத்திலேயே சனி வக்கரித்து செல்வதால் இழுபறியாக இருந்த வேலைகள் முடிவடையும். வி.ஐ.பிகள் அறிமுகமாவார்கள். நீண்ட நாள் கனவாக இருந்த வீடு வாங்கும் ஆசை இப்போது நிறைவேறும். வேற்றுமதத்தவர்கள், மாநிலத்தவர்களால் உதவிகள் உண்டு. சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக் கட்டும்.

உங்கள் யோகாதிபதியான சனிபகவான் தன் சுய நட்சத்திரமான அனுஷம் நட்சத்திரத்தில் 25.01.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 18.10.2015 முதல் 15.11.2016 வரை செல்வதால் இக்காலகட்டத்தில் குடும்ப வருமானம் உயரும். வாகனம் புதிதாக வாங்குவீர்கள். சிலர் வீடு மாறுவீர்கள்.

15.3.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 19.5.2016 முதல் 12.08.2016 வரை உள்ள காலகட்டங்களில் சனிபகவான் அனுஷ நட்சத்திரத்திலேயே வக்கிரமாவதால் பிறர் மீது நம்பிக்கையின்மை, வீண் டென்ஷன், எதிலும் ஆர்வமின்மை, பழைய நண்பர்களுடன் பகைமை வந்து நீங்கும். தாயார் மற்றும் தாய்வழி உறவினர்களுடன் மோதல்கள் வரக்கூடும்.

16.11.2016 முதல் 17.12.2017 வரை உங்கள் பாக்கியாதிபதியும்-விரையாதிபதியுமான புதனின் கேட்டை நட்சத்திரத்தில் சனிபகவான் செல்வதால் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். சிலர் வீடு கட்டத் தொடங்குவீர்கள். வெளிநாட்டில் அல்லது அண்டை மாநிலத்தில் வேலை கிடைக்கும். பணம் வரும். பிதுர வழி சொத்து கைக்கு வரும். தந்தையாரின் ஆரோக்கியம் சீராகும். தாய்வழி உறவினர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

உத்தியோகத்தில் அமைதியான சூழல் உருவாகும். மாறுபட்ட அணுகுமுறையால் உயரதிகாரியை கவர்வீர்கள். உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். சக ஊழியர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும் என்றாலும் அவர்களுடன் அளவாகப் பழகுங்கள். இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். அதிக சம்பளத்துடன் சலுகைகளும் கிட்டும்.

கன்னிப்பெண்கள் பாதச் சனி தொடர்வதால் காதல் விவகாரத்தில் மூக்கை நுழைக்காதீர்கள். அன்பாக பேசுபவர்களையெல்லாம் நல்லவர்கள் என்று நினைத்து ஏமாற வேண்டாம். திருமணம் நிச்சயமாகும். உயர்கல்வியில் போராடி வெற்றி பெறுவீர்கள். மாணவ-மாணவிகள் இனி புத்தகத்தைத் தொட்டால் தூக்கம் வராது. மொழி அறிவை வளர்த்துக் கொள்வீர்கள்.

இந்த சனி மாற்றம் கொஞ்சம் அலைச்சலையும், செலவினங்களையும் தந்தாலும், உங்களை முன்னேற்றப் பாதைக்கும் அழைத்துச் செல்லும்.

**பரிகாரம்!**

**காளியின் அருள் கிடைக்க அர்ச்சனை செய்யுங்கள். நரசிம்மர் வழிபாடும், வைரவர் வழிபாடும் தடைகளை கடந்து உங்களை முன்னேற்றும். சனிபகவான் சாதகமற்ற இடத்தில் இருப்பதால் சனிக்கிழமை சனிபகவானுக்கு சிறப்பு அர்ச்சனை செய்யுங்கள். சனிக்கிழமை ஆஞ்சநேயரை வெற்றிலை மாலை சார்த்தி வணங்கி வாருங்கள்.**

(நாளை விருச்சிகம்)

# சர்வதேச விளையாட்டுப் போட்டி யாழ்.பல்கலை மாணவன் தெரிவு


(யாழ்ப்பாணம்)

சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கு இடையில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்காக சென்றுள்ள இலங்கை பல்கலைக்கழக வீரர்கள் குழாமில் யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீட மாணவன் எம்.என்.சித்திக் உள்ளடங்குவதாக யாழ்.பல்கலைக்கழக உடற் கல்வி அலகு பணிப்பாளர் கே.கணேசநாதன் தெரிவித்தார்.

உலக பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் இன்றுடன் நிறைவு பெறவுள்ளது.

இப் போட்டியில் பங்குபற்றுவதற்காக இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் குழாம் தாய்லாந்து சென்றுள்ளது.

இதில், பளுதூக்கல் போட்டியில் பங்குபற்றுவதற்காக சித்திக் இலங்கை பல்கலைக்கழகங்களின் குழாமில் இடம்பெற்றுள்ளார். இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கிடையில் அண்மையில் இடம்பெற்ற பளுதூக்கல் போட்டியில், 105 கிலோ எடைப் பிரிவில் சித்திக் முதலிடத்தை பெற்றமையடுத்தே, இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது.



யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து உலக பல்கலைக் கழகங்களுக்கிடையிலான பளுதூக்கல் போட்டியில் பங்குபற்றுவதற்காக செல்லும் முதல் வீரன் சித்திக் என்பதுடன், அவரது பயிற்றுநராக எம்.இளம்பிறையன் கடமையாற்றுகின்றார்.

கடந்த வருடம் ரஷ்யாவில் இடம்பெற்ற உலக பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டியின் உயரம் பாய்தல் போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து ஏ.ஜெயரூபன் சென்று பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அலஸ்டர் குக் தெரிவு



(லண்டன்)

உலக கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான 30 பேர் கொண்ட இங்கிலாந்து உத்தேச அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அலஸ்டர் குக் தொடர்ந்து கப்டனாக நீடிக்கப்பட்டு உள்ளார். கப்டன் பதவியில் இருந்து அவரை நீக்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை இங்கிலாந்து கிரிக்கெட் சபை நிராகரித்து விட்டது. முன்னணி வீரர்களில் ஒருவரான டிராட் இந்த உத்தேச அணியில் இடம் பெறவில்லை.

## கௌரவம்

பவுன்சர் தாக்கி மரணமடைந்த பிலிப் ஹியூஸ்"க்குப் புகழஞ்சலி செலுத்தும் விதமாக இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் அவருடைய டெஸ்ட் எண் 408-ஐ தங்கள் சட்டைகளில் பொறித்துக் கொள்ள அவுஸ்ரேலிய அணியினர் முடிவு செய்துள்ளார்.

இந்தியா அவுஸ்ரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் நாளை அடி லெய்டில் தொடங்குகிறது. இந்த டெஸ்டில், ஹியூஸின் நினைவுகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக அவருடைய டெஸ்ட் எண் 408-ஐ தங்கள் சட்டைகளில் பொறித்துக் கொள்ள அவுஸ்ரேலிய அணியினர் முடிவு செய்துள்ளனர். ஹியூஸ், அவுஸ்ரேலிய டெஸ்ட் அணியின் 408 ஆவது வீரர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுதவிர ஹியூஸ்"க்கு அஞ்சலி செலுத்தும் விதமாக மேலும் சில ஏற்பாடுகளை அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை செய்து வருகிறது

# தோற்றது இந்தியா



(புவனேஸ்வர்)

சம்பியன்ஸ் டிராபி ஆண்கள் ஹொக்கி பி பிரிவு லீக் ஆட்டத்தில், இந்தியா 0:1 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியிடம் போராடி தோற்றது.உலகின் டொப் 8 அணிகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் டிராபி ஹொக்கி தொடர், ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. பி பிரிவில் இடம் பெற்றுள்ள இந்திய அணி, தனது முதல் லீக் ஆட்டத்தில் ஜேர்மனியை எதிர்கொண்டது. மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டியில், இரு அணிகளும் தற்காப்பு ஆட்டத்தில் பலமாக இருந்ததால் கோல் ஏதும் விழாமல் இழுபறி நீடித்தது.ஆட்டம் முடிய 40 விநாடிகள் மட்டுமே இருந்த நிலையில் ஜேர்மனி ஒரு கோல் அடித்து வெற்றியை வசப்படுத்தி 3 புள்ளிகளை தட்டிச் சென்றது.

இந்திய அணி கோல் காப்பாளர் ஸ்ரீஜேஷ் ஆட்ட நாயகன் விருது பெற்றார். முன்னதாக நடந்த லீக் ஆட்டங்களில் இங்கிலாந்து அணி 3-1 என்ற கோல் கணக்கில் நடப்பு சம்பியன் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி அதிர்ச்சி அளித்தது. மற்றொரு போட்டியில் பெல்ஜியம் 2:1 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வென்றது. பி பிரிவில் நடந்த லீக் ஆட்டத்தில் நெதர்லாந்து அணி 3:0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டினாவை வீழ்த்தி அசத்தியது.

# ஹோலியுடன் காதல் உண்மை





நடிகை அனுஷ்கா சர்மா இந்திய கிரிக்கெட் வீரர் ஹோலியுடன் உள்ள காதலை ஒப்புக் கொண்டுள்ளார். முன்னணி கிரிக்கெட் வீரர் ஹோலியும், நடிகை அனுஷ்கா சர்மாவும் கடந்த ஒரு வருடங்களுக்கு மேலாக பல இடங்களுக்கும் ஒன்றாக சுற்றித் திரிந்து தங்கள் காதலை வளர்த்து வந்தனர்.

இதுபற்றி அவர்கள் எந்தவித அறிவிப்பையும் வெளியிட்டதில்லை. ஆனால் சில வாரங்களுக்கு முன்பு ஹோலி, - ஆமா நான் அனுஷ்காவை காதலிக்கிறேன். அதற்கு என்ன? என பாய்ச்சல் முகமாக தனது காதலை ஒப்புக் கொண்டார். இதைத் தொடர்ந்து தற்போது அனுஷ்காவும் ஹோலியுடனான காதலை ஒப்புக் கொண்டுள்ளார்.

இதுபற்றி அவர் கூறுகையில், எனக்கும், விராட் ஹோலிக்கும் உள்ள உறவை மறைப்பதற்கு ஒன்றுமில்லை. நாங்கள் ஒன்றாக செல்வதை மறைக்கவில்லை. ஆனால் நாங்கள் அதுபற்றி பேச மாட்டோம் என்று கூறியுள்ளார்.

# யூத் - டயமன்ஸ் மோதல்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் 2014ஆம் ஆண்டுக்கான காகில்ஸ் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டிகளை நடாத்தவுள்ளது. இதில் வடமராட்சி லீக் அணிகளுக்கான தெரிவுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில்,உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழகமும் டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதும் போட்டி இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

முன்னர் இடம்பெற்ற போட்டிகளின் படி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் நவசக்தி விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 6:0 என்னும் கோல் கணக்கில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. கரவை சுடர் விளையாட்டுக் கழகமும் கலட்டி யுனைட்டட் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 4:0 என்னும் கோல் கணக்கில் கரவை சுடர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.(48)



பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் மன்றத்தலைவர் டாக்டர் எஸ்.சுந்தரமூர்த்தி மங்களவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும், முன்பள்ளிச் சிறு வனொருவன் ஒலிம்பிக் தீபமேற்றுவதையும், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஏஸ்.ரஜீவன் உரையாற்றுவதையும் காணலாம். (01)

# ரோமானியப் பேரரசன் நீரோ: நல்லவனா? கெட்டவனா?

வரலாற்று ஆசிரியர்களால் நீரோ மன்னன் (Nero Germanicus AD 54- AD 68) பெரும் தீங்குகள் இழைத்தவனாகக் கருதப்படுகிறான். சிலர் ஆர்வக் கோளாறு காரணமாக அவனை




ஹிட்லர், ஸ்டாலினுக்கு ஒப்பான கொடூரமான மன்னனாகச் சித்திரிக்கிறார்கள். ஆனால் இப்போது நீரோவின் வரலாறு, மறுவாசிப்புக்கு உள்ளாகி வருகிறது.

அவன் தனக்கு முன்னும் பின்னும் ஆண்ட மன்னர்களை விட நல்லவனும் அல்ல, கெட்டவனும் அல்ல என்ற கருத்தாக்கம், வரலாற்று ஆசிரியர்களிடையே வலுபெற்று வந்தாலும், நீரோ தன் காலத்துக்கு மிக முற்போக்கான சீர்திருத்தவாதி எனவும் வரலாற்று ஆசிரியர்கள் சிலர் கருதுகிறார்கள்.

நீரோ மன்னன் மேல் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் சில, அவன் தன் தாயுடன் தகாத உறவு வைத்திருந்தவன், தங்கையை மணந்தவன், கர்ப்பமான மனைவியை எட்டி உதைத்துக் கொன்றவன், தாயைக் கொன்றவன், தம்பியைக் கொன்றவன் என்பது.

ஆனால் இதை எல்லாம் தாண்டி, ரோம் நகரம் பற்றி எரிகையில் அவன் பிடில் வாசித்தான் எனும் குற்றச்சாட்டும் பின்னாட்களில் செல்வாக்கு பெற்ற இரு மதங்களுக்கு அழியாத தீமை செய்தவன் என்பதும் அவன் பெயர் கெட, மிகவும் முக்கிய காரணங்களாக அமைந்தன.

நீரோ மன்னன் புரட்சி செய்த யூதர்களைத் தோற்கடித்து, இரண்டாவது யூதக் கோயிலைச் சூறையாடி அழித்தான். அன்று ரோமானியப் பேரரசில் மிகவும் கலகக்காரர்களாக இருந்த கிறிஸ்துவர்களைத் தீயில் தூக்கிப் போட்டுக் கொன்று புனித போல், புனித பீட்டர் எனும் இரு அப்போஸ்தலர்களைச் சிலுவையில் அறைந்தும் தலையை வெட்டியும் கொன்றான். இவர்களில் பீட்டர் தான் முதலாம் கத்தோலிக்க போப் ஆக அறியப்படுபவர்.

ஆக, நீரோவின் பெயர் பின்னாட்களில் கெட்டதில் விந்தை எதுவும் இல்லை.

நீரோவின் தாய்மாமன் கலிகூலா (Caligula) ரோமானிய சக்கரவர்த்தி ஆனதும் நீரோவின் குடும்பத்தை நாடு கடத்தினான். ஆனால் கலிகூலாவிற்குப் பின்னர் ரோமானிய சக்கரவர்த்தி ஆன அவனுடைய தாய்மாமன் கிளாடியஸ் (Emperor Cladius) தன் அக்கா மகளான நீரோவின் தாயை மணந்து கொண்டதும் நீரோ இளவரசு பட்டம் பெற்றான்.

கிளாடியஸுக்கு இன்னொரு திருமணம் மூலம் பிரிட்டனிகஸ் (Brittanicus) எனும் மகன் இருந்தான். இருந்தும் நீரோ அவனை விட வயதில் மூத்தவனாக இருந்தான். அத்துடன் தன் திறமையால் சக்கரவர்த்தி கிளாடியஸின் மனத்தையும் கவர்ந்தான்.

அதனால் மன்னர் கிளாடியஸ் தன் இன்னொரு மனைவிக்குப் பிறந்த ஒக்டேவியா (Octavia) எனும் மகளை நீரோவுக்குத் திருமணம் செய்வித்து அவனை இளவரசனாக அறிவித்தான். இத்தகைய சகோதர மணம், அன்றைய ரோமில் அனுமதிக்கப்பட்டதே.

இந்தச் சூழலில் நீரோ மன்னனாக வேண்டும் என்ற நோக்கில் நீரோவின் தாய் அக்ரிப்பினா (Agrippina the Younger)> மன்னன் கிளாடியஸுக்கு விஷக் காளான்களை உணவாகக் கொடுத்துக் கொன்றாள். இதில் நீரோவுக்குத் தொடர்பு உண்டா, இல்லையா என்ற சர்ச்சை இன்னமும் நிலவுகிறது. ஆனால் நீரோ அதன்பின் காளான்களை மிகவும் நேசிக்கத் தொடங்கியதாகவும் "கடவுள்களின் உணவு" எனக் காளான்களைப் போற்றியதாகவும் தெரிகிறது!

இப்படி 17 வயதில், கிபி 54ஆம் ஆண்டு மன்னன் ஆன நீரோ, தாய்க்குக் கட்டுப்பட்டு ஆட்சி நடத்தி வந்தான். நீரோ வளர வளர, தாயின் பிடியில் இருந்து விடுபட்டு, சுதந்திரமாக ஆட்சி நடத்த ஆரம்பித்தான். அவன் தாய் அக்ரிப்பினஸ், அதன்பின் நீரோவை ஆட்சியில் இருந்து அகற்றி, தம்பி பிரிட்டானிகஸை ஆட்சியில் அமர்த்த முயன்றாள். அதனால் நீரோ அவர்கள் இருவரையும் கொன்றுவிட்டான்.

அதன்பின் நீரோவின் கவனம், தன் மனைவி ஒக்டேவியா மேல் திரும்பியது. ஒக்டேவியாவை மணந்தால் அரச பதவி கிடைக்கும் என்பதால் தான் நீரோ அவளை மணந்தான். அரசனான பின், ஒக்டேவியா அவனுக்கு அவசியமாகப் படவில்லை. அதனால் ஒக்டேவியாவுக்குக் குழந்தை பிறக்கவில்லை என்ற காரணம் காட்டி, அவளை விவாகரத்து செய்து, பின்னர் கொன்றும் விட்டான்.

இன்று அது எல்லாம் தவறாகக் கருதப்பட்டாலும் அன்றைய சூழலில் மன்னர்கள் எல்லாம் படுகொலை செய்யப்படுவதும், போட்டியாளர்கள் ஆட்சிக்கு வருவதும் சாதாரணம். நீரோவே அப்படித் தான் ஆட்சியில் அமர்ந்தவன். அதனால் எதிராளிகள் மேல் அவன் இரக்கம் காட்டாததில் வியப்பு இல்லை.

ஆட்சியைப் பிடிப்பதில் நீரோ மூர்க்கத்தனம் காட்டினாலும் மக்களிடம் மிகவும் தன்மையாக நடந்துகொண்டான். பிரபுக்கள் சபையான செனற்டைத் தாண்டி ஏழைகள், அடித்தட்டு வர்க்கத்துக்கு நன்மை செய்தான்.

அன்றைய வரிவிகிதங்கள் மிகவும் கடுமையாக இருந்ததால் வரியை 4.5 வீதத்தில் இருந்து 2.5 வீதமாகக் குறைத்தான். அடிமைகளின் சுதந்திரத்தை எஜமானர்கள் தடுக்கலாம் என்ற சட்டத்தை ரோமானிய செனற் இயற்ற முயன்றபோது, அச்சட்டத்தை நீரோ வீட்டோ செய்தான். இவை எல்லாம் மக்கள் மத்தியில் அவனுக்கு மாபெரும் செல்வாக்கை ஏற்படுத்தின.

இதுபோக நீரோ, ஒரு பெரிய இசைக் கலைஞன் என்பதால் ரோமானிய தெருக்களில் அவனே பாடல்களைப் பாடி, மக்களை மகிழ்வித்தான். கிரேக்கத்தில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொண்டு, ரதம் செலுத்தும் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்று வந்தான். அப்போட்டியில் ரதம் கவிழ்ந்து அவனது உயிருக்கு அபாயம் வரும் சூழல் கூட ஏற்பட்டது.

ஆக, நீரோ அன்றைய ரோமானியர்கள் மனத்தில் ஒரு ஹீரோ இமேஜை அடைந்தான். பிரபுக்களும் செனற்டும் அவனை வெறுக்கவும் இது காரணமாக அமைந்தது.

நீரோ இன்றைய சுதந்திர தேவி சிலைக்கு ஒப்பான உயரத்தில் தன் சிலையைச் செதுக்கி, அதை மக்களை வழிபடப் பணித்தான். அன்றைய கிறிஸ்தவர்களும் யூதர்களும் அதை ஏற்க மறுத்தார்கள். (அக்காலத்தில் நீரோவின் சிலைக்கு ஒப்பான எந்தச் சிலையும் உலகில் இல்லை. பின்னாட்களில் இச்சிலை அழிக்கப்பட்டது)

இந்தச் சூழலில் கிபி 64ஆம் ஆண்டு, ரோமில் மிகப் பெரிய தீவிபத்து ஏற்பட்டது. ரோமில் பாதி, பற்றி எரிந்தது. இதனால் கோபத்துடன் இருந்த நீரோ, இத்தீவிபத்துக்குக் காரணம் கிறிஸ்தவர்கள் சதியே எனக் கூறி, கிறிஸ்தவர்களைத் தீயில் தூக்கிப் போட்டான். இந்தச் சூழலில் அப்போஸ்தலர்களான புனித போலும் பீட்டரும் கொல்லப்பட்டார்கள்.

இது நீரோ ஆட்சிக் காலத்தில் நடந்து இருந்தாலும் நீரோவுக்குத் தெரிந்து இது நடந்ததாகக் குறிப்புகள் இல்லை. நீரோவைப் பொறுத்தவரை அவர்கள் இருவரும் கொல்லப்பட்ட கிறிஸ்தவர்களில் இருவர்.

அதன்பின் அழிந்த ரோமில், மிகப் பெரும் கொலேசியம் ஒன்றையும் அரண்மனை ஒன்றையும் நீரோ கட்டினான். இதனால் இந்தப் புதிய நகரை உருவாக்கவே, ரோமுக்கு நீரோ தீ வைத்ததாகப் பலரும் நம்பினார்கள்.

ரோம் பற்றி எரிந்தபோது நீரோ பிடில் வாசித்ததாக, அவனுக்கு 150 ஆண்டுகள் பின்னால் இருந்த வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பு எழுதினாலும், ரோம் எரிகையில் நீரோ, ரோமில் இல்லை என்பது இப்போது தெரிய வந்துள்ளது.

**அவர்கள் தன்னை கைது செய்ய வருவதாக எண்ணிய நீரோ, தற்கொலை செய்துகொள்ள முடிவெடுத்தான். "எப்பேர்ப்பட்ட கலைஞன் என்னுடன் மரணிக்கிறான்?" என வருந்தியபடி தன் மெய்க் காப்பாளனைத் தன்னைக் கத்தியால் குத்திக் கொல்லப் பணித்தான்.**

இந்தச் சூழலில் யூதர்கள் கலகம் செய்ததால் ஜெருசலத்தைப் பிடித்த ரோமானிய படைகள், யூதர்களை அங்கிருந்து அடித்து விரட்டி, இரண்டாவது யூதக் கோயிலை இடித்துத் தள்ளின. பின்னாளில் யூத மதமும் கிறிஸ்தவ மதமும் மிகப் பெரும் செல்வாக்குப் பெற்றாலும் அன்றைய ரோமில் அவ்விரு மதங்களும் இரு சிறு குழுக்களே.

இந்தச் சூழலில் கால்பா எனும் தளபதி, நீரோவுக்கு எதிராகப் புரட்சி செய்தான். நீரோ மேல் கோபத்துடன் இருந்த செனற்றும் அவனைப் பதவி நீக்கம் செய்ய முடிவு செய்தது.

14 ஆண்டுகள் ஆட்சி புரிந்தபின் இப்படி கிபி 68ஆம் ஆண்டு புரட்சி உருவானதால் நீரோ திகைத்துத் தடுமாறினான். செனற் அவனைத் தேசத் துரோகியாக அறிவித்ததாக வதந்தி பரவியது. ஆனால் செனற்றில் அப்போது நீரோ மன்னன் மேல் பலரும் பரிவுடன் இருந்தார்கள். தளபதி கால்பாவைத் தேசத் துரோகியாக அறிவித்தும், நீரோ மேல் நம்பிக்கை தெரிவித்தும் தீர்மானம் இயற்றி, அதை நீரோவிடம் தெரிவிக்கப் படைகளை அனுப்பினார்கள்.

ஆனால் அவர்கள் தன்னை கைது செய்ய வருவதாக எண்ணிய நீரோ, தற்கொலை செய்துகொள்ள முடிவெடுத்தான். "எப்பேர்ப்பட்ட கலைஞன் என்னுடன் மரணிக்கிறான்?" என வருந்தியபடி தன் மெய்க் காப்பாளனைத் தன்னைக் கத்தியால் குத்திக் கொல்லப் பணித்தான்.

நீரோவைக் கத்தியால் குத்தியபின் படைவீரர்கள் வந்து, செனற் அவன் மேல் நம்பிக்கை தெரிவித்திருப்பதைத் தெரிவித்தார்கள். மரணப் படுக்கையில் நீரோவின் முகத்தில் புன்னகை தோன்றியது..

"மிகத் தாமதமாக நம்பிக்கை தெரிவித்து விட்டீர்கள்" எனச் சொன்னபடி, ரோமாபுரியின் மன்னனாக உயிர் நீத்தான் நீரோ.

# உலகளாவிய தமிழ் பாசிசம்

– சுகு-ஸ்ரீதரன்

இது வெவ்வேறு பண்பாடு, மொழி ஆகியவற்றைக் கொண்ட சமூகங்களின் வாழ்வின் மீது தலையிடுவதாக மாறியுள்ளது.

ஜனநாயக உணர்வு சிறிதுமற்ற இந்த குறுந்தேசிய வாத வெறி, மாற்றங்களுக்கான இடைவெளி யின் மீது தாக்குதல் தொடுத்து வருகிறது.

இது ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் பெண்கள் இளையத லைமுறையின் வளர்ச்சி மற்றும் சொந்த சமூகத்தின் வளர்ச்சிக்கு எதிரானதாகும்.

அது ஐரோப்பா வடஅமெரிக்கா வில் மாத்திரமல்ல தமிழகத்திலும் கணிசமான செல்வாக்குச் செலுத்துகிறது.

அண்மையில் புலிகளை ஒரு தீவிரவாத இயக்கம் என்று நடிகை குஷ்பு கூறியதற்காக அவரின் மீதான கீழ்த்தரமான அவதூறு களும் மட்டரகமான வார்த்தைப் பிரயோகங்களும் பாலியல் வக்கி ரங்களும் பேஸ்புக், டுவிட்டர் மற்றும் இணையங்களில் கொஞ்ச நஞ்சமல்ல.

இவை குறுந்தமிழ் தேசியம் உருவாக்கிய ஒரு பண்பாட்டு அம்சம் என்பதை மறுப்பது கடினம்.

வக்கிர வார்த்தைகள் கொண்ட இணையங்கள் பெரும்பாலும் இவர்களாலேயே நடத்தப்படுகின் றன. சமூகம் தொடர்பான இவர்களின் பேச்சு மொழியும் இதுதான். அதில் பல்வேறு விதமான வன்முறைகள் எப்போதும் துருத்திக் கொண்டே நிற்கும்.

இவர்களுடைய எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் தெரிந்து கொள்ளலாம் இவர்களின தராதரம் என்னவென்று.

இன்று ஈழத்தமிழ் பாசிசம் தொற்றுவியாதியாக தமிழகத்தினுள் பரவியுள்ளது. தமிழக மற்றும் ஈழ அடிப்படைவாத சக்திகள் ஒன்றை ஒன்று போசிக்கின்றன. சிங்கள பேரினவாதமும் தமிழ் குறுந்தேசியவாதமும் ஒன்றை ஒன்று அனுசரிப்பது போல.

இதில் அம்மணமான சொந்த நலன்களைத் தவிர சமூக மக்கள் நலன் என்று எதுவும் கிடையாது.

தமிழகத்தில் இன்று புலிகளின் நிதி-களைக் கையாளுவோரின் பினாமிகளாக செயற்படுபவர்கள் இருக்கிறார்கள்.

பொருளாதார நலன்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுபவர்கள். இவர்களுக்கு பிரபா-கரன் இன்றும் உயிருடன் இருக்கிறார் என்று சித்தரிப்பது அவசியம். அது அவர்களின் பிழைப்பு. ஜீவாதார நலன்களுடன் சம்பந்தப்பட்ட விடயம்.

தமிழ் உணர்வாளர்கள் என்ற பெயரில் களவாணிகள் பலர் உலாவருகின்றனர்.

உண்மையில் இந்தியாவின் பிரதான இடதுசாரிக் கட்சிகள் ஈழத்தமிழர் பிரச்சினையில் நிதானமான அணுகு முறையைக் கொண்டிருந்தன.

மார்க்சியம் புரட்சி மற்றும் முற்போக்கு இயக்கம் பற்றிய அறிதல் தளத்தை எமக்கு தமிழில் உருவாக்கித் தந்தது பிரதானமாக அவர்களே.

என்னவோ வரலாற்றில் ஹிட்லர் பற்றி வந்த அளவிற்கு பாசிசத் திற்கெதிராக முன் நின்று போராடிய ஜோர்ஜ் டிமிட்ரோவ், கிராம்சி, யூலியஸ்பூசிக் பற்றி அவ்வளவாகப் பேசப்படவில்லை.

சர்வதேச ஊடகங்கள் என சிலாகிக்கப்படும் ஏகாதிபத்திய காப்பிரேட் ஊடகங்கள் ஸ்டாலினை விமர்சிக்கும் அளவுக்கு ஹிட்லரை விமர்சிப்பதில்லை.

இவை ஒன்றும் தற்செயலானதல்ல.

தமிழ் சமூகத்தில் எமக்கு அண்மித்த காலத்தில் உருவான தலைவர்கள் என்று கூறும் போது ஈவெரா, காமராசர், அண்ணா, தோழர் ஜீவானந்தம் போன்றவர்களை குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

இவர்கள் சாதாரண மக்கள் தொடர்பான அக்கறைகளையும் ஜனநாயக உணர்வும் கொண்டிருந்தவர்கள்.

அந்த மரபு பேணப்படவேண்டும். இன்று தமிழகத்தில் எழுந்துள்ள சூழ்நிலை ஜனநாயகத்திற்கு நல்லதல்ல.

புலிகளை விமர்சித்து அபிப்பிராயம் சொல்பவர்களின் இருப்புக்கு சவால் விடுவது பாரதூரமானதாகும்.

இன்று ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுப்பவர்கள் எனக் கூறப் படும் வைகோ நெடுமாறன், சீமான் போன்றவர்கள் துரதிஸ்டவசமாக ஈழத்தமிழர்களாகப் பிறந்து இங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தால் அவர்களின் இருப்பையே தமிழ் பாசிசம் கேள்விக்குள்ளாக்கியிருக்கும்.

ஈழத்தில் சகோதர தமிழ் இயக்கங்கள் தொழிற்சங்கங்கள் தலைவர்களுக்கு அது தான் நடந்தது.

தமது தனிப்பட்ட நலன்களை



ஒரு புறம் ஒதுக்கிவைத்து விட்டு சிந்திப்பார்களானால் இதனைப் புரிந்து கொள்ள முடியும்.

இவர்களுக்கு தெரியுமோ தெரி யாது... யாழ்மையவாதத்திற்கு தமிழக சினிமா வேண்டும். பாடல்கள் வேண்டும். காஞ்சிபுரம் வேண்டும். மற்றும் மோஸ்தர் உடைகள் வேண்டும் ஆனந்தவிகடன். குமுதம் வேண்டும் பாண்டிபஜார் பூமாலைகள் வேண்டும் திருமண அட்டைகள் வேண்டும் கோயில்கள் வேண்டும். கலியாண மண்டபங்கள் வேண்டும். சங்கீதம். பரதநாட்டியம் வேண்டும்.

தமக்கேதும் பிரச்சினை என்றால் தமிழக இளைஞர்கள் தீக்குளிக்க வேண்டும். தமிழக தலைவர்கள் ஒப்பாரி

---

# கே.வி. மகாதேவன்



38

– பி.ஜி.எஸ்.மணியன் –

திருவிளையாடல் - புராணப் படங்களில் புதிய சகாப்தத்தை தோற்றுவித்த படம்.

"புராணப் படமா? ஏ.பி.நாகராஜன் தான்" என்ற அளவுக்கு அவருக்கு பெயரையும் புகழையும் வாங்கித் தந்த படம்.

1965-ஆம் ஆண்டு தமிழில் சிறந்தபடமாக தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய அரசின் சிறப்பு விரு-தினைப் பெற்ற படம்.

அதற்கு முன்பும் கூட புராணப் படங்கள் வந்திருக்கின்றன. ஆனாலும் புதிய தலைமுறைக்கு ஏற்றபடி புதிய பாணியில் திரைக்கதை அமைத்து இயக்கி இருந்தார் ஏ.பி. நாகராஜன்.

நடிகர் திலகத்தின் அபாரமான நடிப்பாற்றல் - நுணுக்கமான அசைவுகளைக் கூட துல்லியமாக அவர் வெளிப்படுத்தி நடித்த விதம் - சிவனாக வரும் காட்சிகளில் புருவத்தைக் கூட அசைக்காமல் நடித்த பாங்கு-அனைவரையும் பிரமிக்க வைத்தது.

அதுவரை சமூகப் படங்களில் மட்டுமே கையாளப்பட்டு வந்த "பிளாஷ்-பாக்" உத்தியைக் கையாண்டு கதை பின்னப்பட்ட முதல் புராணப் படம் திருவிளையாடல் தான். ஞானப் பழத்துக்காக கோபித்துப் பிரிந்து சென்று தனியாக இருக்கும் முருகனின் சினத்தைத் தணிப்பதற்காக பராசக்தி பரமனின் திருவிளையாடல்களில் சிலவற்றைக் கூறுவதாக கதை அமைத்திருந்தார் ஏ.பி. நாகராஜன்.

அதன்பிறகு வெளிவந்த புராணப்படங்கள், பக்திப் படங்கள் எல்லாமே இந்தப் பாணியிலே-யே வர ஆரம்பித்தன என்பது கவனத்துக்குரிய விஷயம்.

இந்தப் படத்துக்கு கே.வி.மகாதேவன் அமைத்த இசை. அதுவரை அவர் அமைத்த படங்களின் இசையையும் பாடல்களையும் எல்லாம் தூக்கி அடித்தது.

பொதுவாக நடிகர் திலகத்திடம் ஒரு தனித் தன்மை உண்டு. அவர் நடிக்கும் படம் எதுவோ அது வெளிவந்த பிறகு அதில் வேறு எத்தனை சிறப்பம்சங்கள் இருந்தாலும் அவற்றை எல்லாம் விஞ்சி அவரது நடிப்பு மட்டுமே பெரிதாகப் பேசப்படும். அதுதான் முன்னணியில் நிற்கும். ஆனால் திருவிளையாடல் படம் ஒரு விதிவிலக்கு.

நடிகர் திலகத்தின் நடிப்புக்கு இணையாக படத்தில் பேசப்பட்ட விஷயங்கள் நாகேஷின் நகைச்சுவை நடிப்பும். படத்தின் பாடல்களும்.

இன்றளவும் நாகேஷ் காமெடி என்று எடுத்துக் கொண்டால் முதலிடம் பெறுவது திருவிளையாடல் தருமி தானே?

அதே போல படத்தின் இசையும் மிகப் பிரமாண்டமாகப் பேசப்பட்டது.

முதல் காட்சியிலேயே இசையின் ஆக்கிரமிப்பு துவங்கி விடுகிறது.

கயிலாயத்தில் தேவரும், முனிவரும், நாரதரும், பூத கணங்களும் சிவபூஜை செய்யும் காட்சி.

பலதரப்பட்ட இசைக்கருவிகளைக் கையாண்டு அருமையான தனி ஆவர்த்தனத்தை ஆதி தாளத்தில் வெகு அற்புதமாக அமைத்து மெய்சிலிர்க்க வைத்தார் கே.வி.மகாதேவன்.

சங்கீதத்தில் "காலப்ரமாணம்" என்று ஒரு சொல் வழக்கு உண்டு. தாளத்தில் அது மிக முக்கியமான் ஒரு அம்சம். அதன்படி ஒவ்வொரு வாத்தியத்தையும் கணக்கு பிசகாமல் கையாண்டு மகாதேவன் அமைத் திருக்கும் அந்த தனி ஆவர்த்தனமும் அதைத் தொடரும் சீர்காழியின் கணீர்க் குரலும்.

"சம்போ மகாதேவா" - என்ற ஒரே வரியை கொஞ்சம் கொஞ்சமாக கூட்டி விரியவைத்து என்னமாய்த்தான் அமைத்திருக்கிறார்



மகாதேவன்!

கர்நாடக சங்கீதத்தில் "யதி" என்று ஒரு அமைப்பு உண்டு. நாம் தமிழில் அணி என்கிறோமே அது போன்றது தான் இது. இது பலவகைப்படும்.. அவற்றில் "கோபுச்ச யதி" என்று ஒன்றும் "ச்ரோதோவக யதி" என்றும் ஒன்று உண்டு.

"கோபுச்ச யதி" - என்றால் பசுவின் வாலைப் போல ஆரம்பத்தில் அகலமாக இருந்து போகப் போக குறுகி வரும் பாடல் அமைப்பு. மும்மூர்த்தி களில் ஒருவரான ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சிதரின் ஆனந்த பைரவி ராக கீர்த்தனை "தியாகராஜ யோக வைபவம்" இதற்கு சரியான உதாரணம்.

"தியாகராஜ யோக வைபவம்,
அகராஜ யோக வைபவம்.
ராஜயோகவைபவம்,
யோக வைபவம்,
வைபவம்,
பவம்,
வம்" - என்று கீர்த்தனையின் ஆரம்பத்தில் இந்த கோபுச்ச யதிக் கிரமத்தை கையாண்டிருக்கும் தீட்சிதர். சரணத்தில் "ச்ரோதோவக யதி" வகையை அமைத்து முடித்திருக்கிறார்.

"ச்ரோதோவக யதி" - என்றால்..? எப்படி ஒரு ஆறு உற்பத்தியாகும் இடத்தில் ஆரம்பத்தில் குறுகியும், போகப்போக விரிந்தும் செல்லுகிறதோ அது போன்ற ஒரு ஆற்றொழுக்கு போன்ற பாடல் அமைப்புக்கு "ச்ரோதோவக யதி"என்று பெயர். மேலே குறிப்பிட்ட தீட்சிதர் கீர்த்தனையின் சரணத்தில்

"பிரகாசம்,
தத்வப் பிரகாசம்,
சகல தத்வப் பிரகாசம்" என்று இந்த "ச்ரோதோவக யதி" கிரமம் அமைந்திருக்கிறது.

இந்தச் "ச்ரோதோவக யதி" கிரமத்தைக் கையாண்டு

தேவா
மகாதேவா
சம்போ மகாதேவா.. என்று ஒற்றை வரியை வைத்தே மோகன ராகத்தில் பாடலை அமைத்திருக்கிறார் கே.வி.மகாதேவன்.

சீர்காழி கோவிந்தராஜன் முடித்ததும் வீணையில் மோகன ராகத்தை கலைமகள் மீட்டுவதாக வரும் சஞ்சாரங்கள்... இப்படி எல்லாம் பாடலை இப்போது போடவேண்டும் என்றால் அதற்கு கே.வி. மகாதேவன்தான் மறுபடியும் பிறந்து வரவேண்டும்.

தொடர்ந்து பி.சுசீலாவின் குரலில் "நமச்சிவாய வாழ்க" என்ற மாணிக்கவாசகரின் சிவபுராண வரிகள்...

"ஈசனடி போற்றி எந்தையடி போற்றி..." என்று தொடரும் அர்ச்சனைப் பதிகத்தை யஜுர் வேதத்தில் "யோபாம் புஷ்பம் வேதா" என்று துவங்கும் "மந்த்ர புஷ்பம்" - பகுதியை நினைவுறுத்தும் வகையில் மெட்டமைத்து திருவாசகத்தை தமிழ் வேதம் என்று கொண்டாடும் அளவுக்கு அற்புதமாக கையாண்டிருக்கிறார் கே.வி. மகாதேவன்.

(தொடரும்)

வைத்து அழவேண்டும். இலங்கை அரசை வெருட்ட வேண்டும்.

ஆனால் இவர்களுக்கு தமிழக மக்களையோ இந்திய மக்களையோ பிடிக்காது. அதிகம் வேண்டாம், இவர்களுக்கு இலங்கையின் மலையக மக்களைப் பிடிக்காது.

உதாரணமாக தமிழகத் தமிழர்கள் இன்னல்களை அனுபவித்து அகதிகளாக யாழ்ப்பாணம் வருகிறார்கள் என வைத்துக் கொள்வோம். இந்த யாழ்மையவாதம் எப்படி நடந்து கொள்ளும் என்பது அப்போது தெரியவரும்.

என்னதான் தான் நல்லது செய்தாலும் புறணி கிளப்புவதும் புறங்கூறுவதும் இதன் பழக்கதோசம். தன்னுள்ளும் பிற சமூகங்கள் தொடர்பிலும் தீண்டாமை உணர்வை வைத்திருக்கிறது - வெள்ளைக்காரரைத் தவிர.

இது யாருக்கும் உபசரணை செய்வதாக இருந்தால் கூட சொந்த காரியமாகத்தான் இருக்கும்.

சாதாரண மக்களைப்பற்றி இங்கு நான் குறிப்பிடவில்லை.

உணர்ச்சி வயப்படுதலூடாகப் பார்க்காமல் பகுத்தறிவுயன்னலூடக பிரச்சினைகளைப் பார்க்க முயல வேண்டும்.

குஷ்பு மீதான அவதூறுகள் தமிழ் பாசிசம் பிரசவித்த புதிய தலைமுறை ஆதரவாளர்களால்தான் மேற்கொள்ளப்படுகிறது. இதுபோன்றவை முடைநாற்றம் வீசும் தமிழ் தேசியத்தின் அவலட்சணமான பக்கத்தைப் புலப்படுத்துகின்றன.

ஒரு பக்கம் ஈழத்தமிழர்கள் மீதான வாஞ்சை? மறுபுறம் இந்திய நாட்டின் பிறமாநிலத்தவர்கள் மீதான வெறுப்பு.

கருத்து மற்றும் சுதந்திரத்திற்கான இடைவெளி தமிழ் சூழலில் பாதுகாக்கப்பட வேண்டும்.

அறிவு தமிழ்பாசிசம் என்னும் கிணற்றின் வாயளவு என்ற போக்கு முழு சமுதாயத்திற்கும் எதிர்காலத் தலைமுறைக்கும் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தும். இதனை தலைமுழுக வேண்டும்.

# கடவுள் ஏற்றுக் கொள்வாரா?



குயவன் ஒருவன் மண் பாண்டங்கள் செய்து கொண்டிருந்தான். அவன் வீட்டு வாசலில் ஒரு ஆடு கட்டப்பட்டிருந்தது. அந்த வழியே துறவி ஒருவர் வந்தார்.

துறவியை வணங்கி அந்தக் குயவன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தான்.

பின் அவர் விடை பெறும் போது குயவன், "ஐயா, தயவு செய்து இரண்டு நாட்கள் இங்கே தங்கிச் செல்லுங்கள். இங்கு நாளை எங்கள் குல தெய்வத்தினை வணங்குகிறோம். விழா சிறப்பாக இருக்கும். விழாவில் வாசலில் கட்டப்பட்டிருக்கும் ஆட்டினைப் பலி கொடுத்து பூஜை செய்யப் போகிறோம்" என்று சொன்னான்.

துறவி சற்றும் எதிர்பாராத நிலையில், குயவனின் பானை ஒன்றினை எடுத்து ஓங்கித் தரையில் அடித்து உடைத்தார். பானை துண்டு துண்டாகச் சிதறியது.

குயவன் அதிர்ச்சி அடைந்தான். அவனால் பேசக் கூட முடியவில்லை. துறவிக்குப் பைத்தியம் பிடித்திருக்குமோ என்று அஞ்சினான்.

துறவி அவனைப் பார்த்து, "இந்த உடைந்த துண்டுகளை எடுத்துக் கொள். அவை எல்லாம் உனக்குத்தான்" என்றார்.

குயவன், "என் பானையை உடைத்து எனக்கே தருகிறீர்களா?" என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

அதற்கு துறவி, "கடவுள் படைத்த ஒரு உயிரைப் பலியிட்டு கடவுளுக்கே கொடுக்கப் போகிறேன் என்கிறாயே! அதை அவர் ஏற்றுக் கொள்வார் என்றால், இந்த உடைந்த துண்டுகளை நீ ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது?" என்று கேட்டார்.

குயவ்ன் பேச வழியின்றி வாயடைத்து நின்றான்.

# திருத்தப்பட வேண்டியவர்கள்

அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற அருணா சாய்ராம் தமிழிசைக்கச்சேரி கேட்கப் போயிருந்தேன்.

அருணா சாய்ராமின் குரல், அது ஒரு தூய வெளிச்சம். அந்த வெளிச்சத்தில் நம்மைக் கரைத்துக் கொண்டுவிடுவது பாக்கியம். மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தேன்.

அப்போது எதிர்வரிசையில் இருந்த பெண்ணின் செல்போன் அடிக்கவே கவனம் கலைந்து திரும்பிப் பார்த்தேன். அந்தப் பெண் பாடலுக்கு தலையாட்டியபடியே ஏதோ வேலை செய்து கொண்டிருப்பதைக் கவனித்தேன். என்ன செய்கிறார் என்று உற்றுப்பார்த்த போது பள்ளிப் பிள்ளைகளின் பரீட்சைப் பேப்பர்களைத் திருத்திக் கொண்டிருந்தார்.

எனக்குத் திகைப்பாக இருந்தது. கஷ்டப்பட்டு மாணவர்கள் படித்து பரீட்சை எழுதித் தந்தால் அந்தப் பேப்பர்களை இப்படி அலட்சியமாக பாட்டுக் கேட்டுக் கொண்டு கடகடவென புரட்டி சிவப்புப் பேனாவால் மார்க் போடுகிறாரே என்று ஆத்திரமாக வந்தது.

அந்தப் பெண்ணிற்கு நாற்பது வயதிருக்க கூடும், நான் பார்ப்பதைக் கவனித்தபடியே புன்னகை செய்தார், அவரது மடியில் இன்னொரு பேப்பர்க் கட்டு பிரிக்கப்படாமல் இருந்தது. பள்ளிமுடிந்து அப்படியே கச்சேரிக்கு வந்திருக்கிறார் என்பது புரிந்தது. இசையில் அவர் காட்டும் ஆர்வம் இவ்வளவு தீவிரமாக இருக்கிறது என்றால், மாணவர்கள் படிப்பு விஷயத்தில் மட்டும் ஏன் இத்தனை அலட்சியம். அந்தப் பெண் பேப்பரை விடுவிடுவென புரட்டி மார்க் போட்டபடியே ஆனந்தமாகத் தலையாட்டி பாட்டினை ரசித்துக் கொண்டிருந்தார்.


பரீட்சைப் பேப்பரை இப்படி அவசர கோலத்தில் திருத்துவதைப் பார்த்த பிறகு என்னால் கச்சேரியைக் கேட்க முடியவில்லை. இத்தனை பேர் தன்னைப் பார்க்கிறார்களே என்று கூட அந்தப் பெண் கூச்சப்படவில்லை. அப்படியானால் இப்படி பேருந்து பயணத்தில், பூங்காவில், சினிமாத் தியேட்டரில், கச்சேரி நடுவில் பேப்பர் திருத்துவது ஒன்றும் தப்பில்லை என்று நினைக்கிறாரோ என்று மனது அந்தப் பிரச்சினையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது.

கச்சேரி முடிவதற்குள் அவர் இரண்டு கட்டுப் பேப்பரையும் திருத்தி முடித்திருந்தார். என்னால் அந்த செயலைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. ஆசிரியர் பணியில் இருக்கும் எனது நண்பருக்கு உடனே போன் செய்து புலம்பினேன். அவர் சிரித்தபடியே சொன்னார்:

"இது ஒன்றும் புதியதில்லை. எனது நண்பர் ஒருவர் தனது வகுப்பு மாணவர்கள் எழுதும் பரீட்சைப் பேப்பரை வீட்டில் கொண்டுவந்து போட்டுவிடுவார், பேப்பரைத் திருத்தி மார்க் போடுவது அவரது மனைவியின் வேலை. ஒரு நாள் அவர்கள் வீட்டிற்குப் போயிருந்தேன். ஆறாவது வகுப்பு படிக்கும் மகள், பத்தாம் வகுப்பு பேப்பரை திருத்திக் கொண்டிருக்கிறாள். ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள் என்று கேட்டதற்கு, எந்த ஒரு மாணவனையும் நான் பெயில் ஆக்குவதில்லை, மற்றபடி இவ்வளவு பரீட்சைப் பேப்பர்களைத் திருத்த ஏது நேரம், அதான் இப்படி என்று அமைதியாகப் பதில் சொன்னார்.

இவராவது பரவாயில்லை, இன்னொரு ஆசிரியர் மாணவர்களின் பரீட்சைப் பேப்பர்களை பைக்கில் செல்லும் போது வழியில் எங்கோ தவறவிட்டுவிட்டார். அந்த ஐம்பது மாணவர்களுக்கும் அவருக்குத் தோன்றிய மதிப்பெண்ணை குத்துமதிப்பாகப் போட்டுவிட்டதோடு தலைமை ஆசிரியர் வசம் இந்தச் செய்தி போய்சேரவிடாமல் மாணவர்களை மிரட்டி ஒடுக்கிவிட்டார். இப்படி ஊருக்கு நூறு சம்பவங்கள் நடக்கின்றன" என்றார்.

பரீட்சைப் பேப்பர்களைத் திருத்துவதில் ஆசிரியர்கள் மேற்கொள்ளும் குளறுபடிகளைப் பற்றி அவர் பேசப்பேச எனக்கு ரத்தம் கொதிக்கத் துவங்கியது. அவர் சொன்னதில் பாதியை என்னால் நம்பவே முடியவில்லை, இவ்வளவு மோசமாகத் தான் கல்வித்துறை செயல்படுகிறதா என்று




ஆத்திரமாக வந்தது.

மறுநாள் எனக்குத் தெரிந்த பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் பேசியபோது, பரீட்சைப் பேப்பர்களை எப்படித் திருத்துவது என்பதற்கு இவர்களுக்கு பயிற்சியே கிடையாது., அதற்கென ஆண்டிற்கு ஒரு முறை சிறப்பு பயிற்சிகள் ஏதாவது நடத்தலாம். அதைப்பற்றி எல்லாம் கல்வித்துறையில் யாருக்கு அக்கறை இருக்கிறது என்று சலித்துக் கொண்டார்.

அப்படியானல் மாணவர்கள் விழுந்துவிழுந்து படித்துப் பரீட்சை எழுதுவது வெறும் கண்துடைப்பு நாடகம் தானா என்று கேட்டேன்.

அப்படி முழுமையாக ஒதுக்கிவிட முடியாது, தவறு சிஸ்டம் மீது இருக்கிறது. அதை சில ஆசிரியர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று கூறினார்.

எப்படி என்று கேட்டேன்.

ஒரு வகுப்பிற்கு ஐம்பது மாணவர்கள் வரை சேர்த்துவிடுகிறார்கள், மாணவர்களின் பரீட்சைப் பேப்பரை ஆசிரியர் திருத்துவதற்கு போதுமான நேரம் அளிக்கப்படுவதில்லை. பணிச்சுமை காரணமாக ஆசிரியர்களால் பேப்பர் திருத்துவதில் முழுமையாக ஈடுபடமுடியவில்லை, என்றார்.

இந்தப் பதில்களை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நமது கல்விமுறையில் உடனடியாக மாற்றம் கொண்டுவர வேண்டியது பரீட்சைக்கு எப்படிக் கேள்விகள் கேட்பது, அதை எப்படித் திருத்துவது என்பதைப்பற்றியே.


இன்று நாம் நடைமுறையில் வைத்துள்ள பரீட்சை முறை மிகவும் அபத்தமான ஒன்று.

ஒரு புள்ளி, இரண்டு புள்ளி, ஐந்து புள்ளி, பத்து புள்ளி, வரைபடம், மனப்பாடப் பாட்டு என்று கேள்வி கேட்கும் வகைப்பாடு அரதப்பழைய முறை. பிரிட்டிஷ் கல்வியாளர்கள் அறிமுகப்படுத்திய முறையை அப்படியே நகலெடுத்து வருகிறோம். அத்துடன் இந்த முறையில் மாணவர்களின் கற்றல்திறனை முழுமையாக வெளிக்கொண்டுவர முடியாது, இதனால் மாணவர்களை மனப்பாடம் செய்யும் இயந்திரமாக மாற்றி வருகிறோம்.

கல்வியை வணிகமாக்கிச் சீரழித்துவிட்ட சூழலில் பரீட்சைப் பேப்பர்களை திருத்துவதைப் பொழுதுபோகாமல் ஆடும் புதிர்விளையாட்டினைப் போல ஆசிரியர்கள் மாற்றிவருவது வேதனைக்குரிய விஷயம்.

இப்படி அலட்சியமாகப் பரீட்சைப் பேப்பர்களைத் திருத்தும் ஆசிரியர்களை எப்படி, யார் திருத்துவது என்றுதான் புரியவில்லை. ஆனால் இதை இப்படியே அனுமதித்தால் நமது கல்விமுறை முற்றிலும் நாசமாகிவிடும் என்பதை மட்டும் தெளிவாக உணர முடிகிறது.

- எஸ்.ராமகிருஷ்ணன் -



சுன்னாகம் பொலிஸாரின் ஏற்பாட்டில் கந்தவரோதயா கல்லூரியில் கல்விகற்கும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது பாடசாலை அதிபர் இ.ஈஸ்வரன் மற்றும் பொலிஸ் பொறுப்பதிகாரி சமீர கருணாரட்ண ஆகியோர் மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (54)



வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபரின் கட்டளைக்கு அமைவாக அண்மையில் பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு பளை மத்திய கல்லூரியில் இடம்பெற்றபோது.... (37)




வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 175 ஆவது மாதாந்த பௌர்ணமி கருத்தாடல் நிகழ்வு அண்மையில் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் நடைபெற்றபோது... (11)





# நிகழ்வுகளின் பதிவுகள்....

உயரப்புலம் மெ.மி.த.க. பாடசாலையின் ஒளிவிழா அண்மையில் நடைபெற்றது. இதில் பாடசாலை அதிபர் கு. திலீபன், அருட்திரு. அடிகளார் ஆகியோர் உரையாற்றுவதையும் ஆசிரியை செல்வி மாலதி மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (137)






துணுக்காய் பிரதேச செயலகத்தின் மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு அண்மையில் பிரதேச செயலர் இ.குணபாலன் தலைமையில் இடம்பெற்றது. (90)

# கிளி.மாவட்டம் கல்வியில் முன்னேற மாணவர்களுக்கு அதிக ஆர்வம் தேவை

## கிளி.மாவட்ட ஆரம்ப பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்திற்கு நிகராக கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சி முன்னேற்றம் அடைந்துள்ளது.இம்மாவட்டத்தில் கடந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பல மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளார்கள். இதுபாராட்டப்படவேண்டிய விடயமாகும் மேலும் இம்மாவட்டத்தில் கல்வி பயில்கின்ற மாணவர்கள் தங்கள் மாவட்டம் கல்வியில் முன்னேற்றம் அடையவேண்டும் என்ற உத்வேகத்தோடு கற்கின்றார்கள் என கிளிநொச்சி ஆரம்ப பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளர் கணேசலிங்கம் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலயத்தில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மற்றும் ஈ.பி.டி.பி வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் மாணவர்களுக்கான உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றத்திற்கு வந்த போது எங்களது கல்வி நிலைமை எப்படியிருந்தது 2014 இறுதிக்குள் எங்களது கல்வி நிலைமை எப்படியிருக்கிறது. என்பதனை மக்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்கு எவரும் சிந்தித்து இருக்கமாட்டார்கள். அம்பாள்குளத்தில் இப்படியொரு பாடசாலை நிமிர்ந்து நிற்கும் என்றும் இந்த பிள்ளைகள் கல்வி கற்பதற்கான நல்ல சூழல் ஏற்படுத்தப்படும் என்றும் 2009 இற்கு முன்பு பூங்காவாக இருந்த இந்த இடம் இன்று மிகப்பெரிய கல்விக்கூடமாக விவேகானந்தா வித்தியாலயமாக மாறியிருக்கிறது. இந்த நான்கு வருடங்களில் இப்படியொரு மாற்றம் வருமா என ஒருவரும் எண்ணியிருக்கமாட்டீர்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் பல தடைகளை உடைத்தெறிந்து இந்த சமூகத்தினை நிமிர்த்த வேண்டும் என்ற நோக்கில் இந்த பாடசாலை ஆரம்பித்தார். எந்த நோக்கத்திற்காக இந்த பாடசாலையினை ஆரம்பிக்கப்பட்டதோ தற்போது அந்த நோக்கம் படிப்படியாக நிறைவேறிக்கொண்டிருக்கிறது.எனத் தெரிவித்தார்.

பாடசாலை முதல்வர் திருமதி மாணிக்கவாசகர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், ஈ.பி.டி.பி வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் கிருஸ்ணசாமி, கரைச்சிக்கோட்ட கல்விப்பணிப்பாளர் அமிர்தலிங்கம், கிராம அலுவலர் திருமதி நீலலோஜினி, பாடசலை அபிவிருத்திச் சங்க செயலாளர் மயில்வாகனம் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## உறவை வலியுறுத்தும் நிகழ்வுகள்

ஊவா மற்றும் வடக்கின் உறவை வலியுறுத்தும் வகையிலான நிகழ்வுகள் ஊவா மாகாணசபையின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றன. இந்நிகழ்வினை ஊவா மாகாண முதலமைச்சர் சஷிந்திரராஜபக்ஷ மங்கள விளங்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ். கோப்பாய் நாவலர் தமிழ் மகாவித்தியாலய மாணவர்களின் நடன நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பரீட்சை நிலையங்களுக்கு அண்மையில் தேர்தல் பிரசாரம் நடாத்த முடியாது

(யாழ்.நிருபர்)

கல்விப்பொதுத்தராதரப்பத்திர சாதாரணதரப்பரீட்சைகள் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இந்தப் பரீட்சைக்காக நாடளாவிய ரீதியில் 4,279 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பரீட்சை நிலையங்களை அண்மித்த பகுதிகளில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படமாட்டாதென பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

குறித்த பரீட்சை நிலையங்களை அண்மித்த பகுதிகளில் மேற்கூறிய எந்த நடவடிக்கைகளுக்கும் அனுமதி வழங்கக்கூடாதென சகல பொலிஸ் நிலையங்களுக்கும் சுற்று நிருபங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (10)

## ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்கி வைக்கப்பட்டன



(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஈ.பி.டி.பி யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து 114 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த திருநெல்வேலி மகாத்மாஜி சனசமூக நிலையத்துக்கு ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நல்லூர் பிரதேசசபையின் எதிர்க்கட்சித்தலைவரும் ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச அமைப்பாளருமான அம்பலம் இரவீந்திரதாசன் சனசமூகநிலையத் தலைவரிடம் அவற்றை வழங்கினார். இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் திருமதி அன்னலிங்கம், பதில் செயலாளர் கமலேஸ்வர சர்மா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## "சஞ்சிகைகளின் சங்கமம்" நாற்பெரும் சஞ்சிகை வெளியீடு

அட்டாளைச்சேனை அல் அர்ஹம் வித்தியாலயத்தில் சஞ்சிகைகளின் சங்கமம் நாற்பெரும் சஞ்சிகைகளின் வெளியீட்டு விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

அதிபர் எம்.ஏ. அன்சார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.எம். ஹனீபா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்

இந்நிகழ்வின்போது ஆசிரியர்களான எம்.எஸ். பைறூஸ் ஏ.ஆர்.எம். இர்ஷாத், எம்.எல் எம்.அப்துல்லா, ஜே.எம்.றிஸ்வான் ஆகியோரின் முயற்சியினால் உருவாக்கம் பெற்ற மொழிவளம், தளிர் சிட்டுக்களின் சிதறல், வினாக்களின் தொகுப்பு ஆகிய நான்கு சஞ்சிகைகள் வெளியிட்டு வைக்கப்பட்டன. (10)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

யாழ்ப்பாணம், மட்டக்களப்பில் பிரபல்யமான Tourist Hotel ஒன்றிற்கு Room Boy,Cook தேவைப்படுகிறது. தங்குமிடம் உணவு இலவசம் சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். தொடர்புக்கு 0771157107, 0766524164.

---

போனபொழுது போனது தான் வந்த பின்னர் நுகர முடியும், உங்களின் கனவு துறைமுகம், விமான நிலையம், கட்டடத்துறை சார்ந்ததா? அப்படியாயின் நீங்கள் அழைக்கவேண்டிய எண் 0774430166. மேலும் ஜேம், டொபி, பிஸ்கட், கோடியல், வெல்டிங், பாதுகாப்பு உத்தியோகத்தர் போன்ற பல தொழில் நிறுவனங்களுக்கு 17-50 வயது பிரிவு ஆண், பெண் இருபாலாரும் உடனடியாகத் தேவை. உற்பத்தி லேபல், பொதியிடல், களஞ்சிய பிரிவகளில் பணியை தொடர்ந்திட விரைந்து செயற்படுங்கள் சம்பளம் 18,000- 22,000 - 40,000 வரை உணவு தங்குமிடம் குறைந்த விலையில் நண்பர்கள், குழுக்கள் தம்பதியினர் இணைந்து வேலை செய்யலாம். தொடர்புக்கு 0774430166.

---

68 நாடுகளில் பரந்துள்ள இலங்கையில் அமைந்துள்ள வெளிநாட்டு பாதுகாப்பு நிறுவனத்திற்கு பாதுகாப்பு அதிகாரிகள் (ஆண், பெண்) இணைத்துக் கொள்ளப்படுவர். கொழும்பு, வத்தளை, கட்டுநாயக்க நீர்கொழும்பு, புத்தளம், ஓமந்தை, கிளிநொச்சி, பரந்தன், யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, மட்டக்களப்பு, அம்பாறை, அக்கரைப்பற்று, கல்முனை சிலாபத்துறை, மன்னார், கண்டி, வரக்காபொல, குருணாகல், மாத்தளை, நுவரெலியா, ஹட்டன், பதுளை போன்ற பிரதேசங்களில் 18.-65 ஆண், பெண் தேவை. சம்பளம் 30,000 முதல் உணவு சகாய விலைக்கு தங்குமிடம் இலவசம் தொடர்புக்கு 0773556362.

---

துப்புரவு வேலைக்கு உடனடியாக ஆட்கள் தேவை. தங்குமிட வசதி இலவசம், கொழும்பில் வேலை மாதம் 24,000 சம்பளம் வழங்கப்படும் தொடர்புக்கு 0773012765, 0773952750.

---

இலங்கையில் அமைந்துள்ள முன்னணி நிறுவனங்களுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆண், பெண் இருபாலாரும் தேவை.வயது 18-65 வரை சாப்பாடு, தங்குமிடம் இலவசம், சம்பளம் 35,000 (ஓட்டி) தேவைப்படும் பிரதேசம் கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பண்டாரவளை, வவுனியா, கிளிநொச்சி, அக்கரைப்பற்று, அம்பாறை வரும் நாளிலேயே சேர்க்கப்படுவர். தொடர்புகளுக்கு 0766482487.

## புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவிக்கு தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிப்பு



அல்லைப்பிட்டியில் அமைந்துள்ள றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியாலய மாணவி -செல்வி பார்த்தீபன் சாணுஜா அண்மையில் வெளியாகிய புலமைப்பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். பாடசாலை சமூகத்தினால் கடந்த வியாழக்கிழமை பாராட்டுவிழா நடாத்தப்பட்டு 50 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட பரிசுகள் வழங்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

பரீட்சையில் சித்தியடைந்த,செல்வி பார்த்தீபன் சாணுஜாவிற்கு -அதிபர் என்.பத்மநாதனால 37 ஆயிரம் ரூபாவினை வங்கியில் வைப்பிலிடப்பட்டு வங்கிக்கணக்குப் புத்தகம் வழங்கப்பட்டதுடன்- புதிய துவிச்சக்கர வண்டியுடன் - அதிபரினால் மாணவிக்கு தங்கப்பதக்கமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# பொலிஸ் கடமைக்கு இடையூறு மூவருக்கு விளக்கமறியல்



(கொழும்பு)

அளுத்கம பொலிஸ் நிலையத்தில் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக கூறப்படும் வெளிநாட்டு யுவதியொருவர் உட்பட இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பெண், ஒருவரிடம் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக பொலிஸ் நிலையத்திற்கு வருகைதந்திருந்த சந்தர்ப்பத்தில் அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன கூறினார்.

இதற்கமைய, அவர்கள் களுத்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதுடன், 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

பிணைக்கான தொகையை செலுத்த முடியாது போனதால், அவர்களை விளக்கமறியலில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# போர் வெற்றிக்கு காரணம் நிறைவேற்று அதிகார முறையல்ல

## என்கிறார் சரத்பொன்சேகா

(கொழும்பு)

போரில் வெற்றி பெற்றமைக்கு காரணமாக இருந்தது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையல்ல என்று முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் காரணமாகவே போரில் வெற்றி பெற முடிந்ததாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்து வருகிறார்.

இது தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த சரத் பொன்சேகா, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்பவரால் நாட்டின் நிர்வாகங்களை முன்னெடுத்து செல்லமுடியும்.

இதனைவிடுத்து போரில் வியூகங்களை வகுப்பது நிறைவேற்று ஜனாதிபதி அல்ல என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

எனவே இலங்கையின் இராணுவத்தினர் மீது போர்க் குற்றச்சாட்டு சுமத்தப்படுமானால் அது தொடர்பில் மின்சாரக் கதிரைக்கு செல்லத் தாம் தயார் என்றும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.



# அண்மையில் பெய்த மழையால் 1244 குடும்பங்கள் பாதிப்பு


(உடுவில்)

கடந்த வாரம் பெய்த கடும் மழையால் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 1244 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

37 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. 26 கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 772 பேர் தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு ஒரு வாரத்துக்கான உலர் உணவுகள் உடுவில் பிரதேச செயலகத்தால் வழங்கிவைக்கப்பட்டன. தினமும் அவர்களுக்கு சமைத்த உணவுகளும் வழங்கப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

# பரமர் சங்கமம்



'மாதம் மும்மாரி பொழிந்ததா மந்திரி' பழந்தமிழ் இலக்கியங்களில் அரசன் நாட்டு வழமை விசாரிக்கும் கதைகளில் மேலே வந்த வசனங்களை படித்தும் கேட்டும் இருக்கிறம்.

கேட்டும் இருக்கிறமெண்டால் அரச நாடகங்களில் இவ்வசனங்கள் இடம்பெறுவது தவறாது என்கையில் முற்காலங்களில் மாதம் மும்மாரி பொழிந்ததாகத்தானே சொல்லப்படுகிறது.

எங்கட காலங்களில் வருடத்தில் ஒரு தடவை தான் மும்மாரி பொழிவதைக் கண்டும் வானம் அதுவும் சில வருடங்களில் பொய்த்துப் போவதையும் காணுறன். 2013 ஆம் வருடம் உங்களுக்கெல்லாம் தெரியும் ஒருமாரியோடை மழைகாலம் முழுஞ்சு போச்சு.

மும்மாரியைப் பரமர் கணக்கிடுவது வீட்டுக் கிணத்தை வைச்சுத்தான் ஒக்டோபர் மாதம் ஒருமாரி வந்ததும் கிணறு முட்டிக்கொண்டு வரும் கொஞ்ச நாள்விட்டு நவம்பர் மாதத்தில் மறுமாரி வந்து கீழேபோன கிணத்துத் தண்ணி மேலைவரும்.

பிறகும் மழை ஓய்ந்து டிசம்பர் மாதம் இரண்டொரு நாள் அடைச்சு வைத்துப் பெய்யும் அப்பவும் மூண்டாம் முறையாக் கிணறு முட்டி நிக்கும் இதைப்போல 2013 ஆம் வருசம் நடக்கேல்லை. ஒருமுறைவந்து போனதுபோனது தான்

இந்த வருசம் பெய்யிற மாரிமழேலை பிரதான வீதிகளில் இருக்கும் குறுக்குத் தெருக்கள் வெள்ளத்தில் மூழ்கி விட்டதை மும்மாரிகளிலும் பாக்க முழுஞ்சுது. அதுவும் ஒரு வகேலை நல்லதாத்தான் படுகுது. ஏனெண்டா மழைநீர் வழுஞ்சு ஓழ குளங்களை தாண்டிக் கடலுக்கு போய்ச் சேர்ந்திடும்.

இதனால் சுற்றுச்சுழலில் நுளம்புப் பெருக்கம் போக்கு வரவு நடமாட்டத்துக்கும் இடையூறாக அமைஞ்சாலும் சகல இடங்களிலும் தேங்கிய மழைநீர் நிலம் குடிச்சு நிலத்தடி நீராக மக்களுக்கு கிடைக்கும்.

எங்கட சனங்கள் பல நாள் வெய்யிலைத் தாங்கினாலும் ஒரு நாள் மழையைத் தாங்க மாட்டுதுகளெண்டு கிராமங்களில் சொல்லுறேம் உண்டு. ஒரு நாள் முழுநாளும் மழை பெய்திட்டா சனியன் வந்திட்டுது கிறக மழை எண்டெல்லாம் திட்டுறதேம் கேட்டிருக்கிறம்.

மழை வீழ்ச்சி இல்லாமல் வளம் இல்லையெண்டதை இப்ப சனமெல்லாம் நினைக்கிறேல்லை. இலங்கையில் தென்பகுதி மலையகம் இன்னும் கொழும்பு போன்ற பகுதிகளில் இக்காலங்களிலும் மும்மாரி ஒவ்வொரு மாதங்களும் பெய்வதை அறிவம்.

மாதம் மும்மாரி பொழிய வாழ்ந்த எங்கடை சனத்துக்கு வருடம் மும்மாரி வருவதே பீடையாத்தான் படுகுது இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்.

# சமூகச்சீர்கேடான பிரச்சினைகளை தீர்க்க சட்டத்தை கையில் எடுப்பது தவறானது

## மன்னார் நீதிபதி தெரிவிப்பு

(மன்னார்)

சமூகச்சீர்கேடான பிரச்சினைகள் தலைதூக்கும்போது அவற்றை சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி முடிவுக்கு கொண்டு வருவதை விடுத்து சட்டத்தை உங்கள் கையில் எடுத்துக் கொண்டு செயற்படுவதை சட்டம் பார்த்துக் கொண்டு இருக்காது என மன்னார் நீதிபதி செல்வி ஆனந்தி கனகரட்ணம் 54 பெண்களுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

மன்னார் இலுப்பைக்கடவை அந்தோனியார்புரப் பகுதியில் கள்ளுத் தவறணையில் போத்தல் கள்ளு விற்பனை செய்யப்படுவதால் தங்கள் கணவர்மார் அதனைக் குடித்துவிட்டு வீடு திரும்பி குடும்ப அமைதிக்கு பங்கம் ஏற்படுத்துவதை பொறுக்க முடியாத அக்கிராம பெண்கள் கூட்டம் ஒன்று கடந்த மாதம் 16ஆம் திகதி போத்தல் கள்ளு விற்பனை செய்த தவறணைக்குள் புகுந்து அங்கு பல சேதங்களை ஏற்படுத்தினர என 54 பெண்களைப் பொலிஸார கைது செய்தனர்.

இவர்களை இலுப்பைக் கடவை பொலிஸார் கடந்த புதன் கிழமை மன்னார் மாவட்ட நீதிமன்றில் நீதிபதி செல்வி ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் முற்படுத்தியபோது நீதிபதி அந்தப் பெண்களை நோக்கி. - இந்த நாட்டில் சட்ட திட்டங்கள் உண்டு. ஓர் இடத்தில் சமூக சீர்கேடான சம்பவங்கள் இடம் பெறும்போது முதலில் அவற்றை சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கையாள வேண்டும். அன்றேல் அதற்கான சட்ட வழிகள் இருக்கின்றன. அதன்படி நடந்து கொள்ள வேண்டும்.

அதைவிடுத்து நீங்களே சட்டங்களை உங்கள் கையில் எடுத்துக் கொண்டு அமைதிக்கு பங்கம் விளைவிப்பதை சட்டம் வெறுமனமே பார்த்துக் கொண்டிருக்காது. இனிமேல் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடும் பட்சத்தில் நீங்கள் சிறைவாசம் அனுபவிக்கும் நிலையே உருவாகும் என எச்சரித்து அனைவரையும் பத்தாயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுவித்து வழக்கை ஒத்தி வைத்தார்.

## நவக்கிரக ஹோம ஆராதனை

யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை சனிப்பெயர்ச் சியை முன்னிட்டு விசேட நவக்கிரக ஹோம ஆராதனை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை சனிபகவான் மாற்றமடைகின்றார். இதனை முன்னிட்டு அன்று காலை 7.30 மணி முதல் நவக்கிரக தேவர்களுக்கு விசேட ஹோமம், அபிஷேக ஆராதனை, சனீஸ்வர பகவானுக்கு விசேட சகஸ்ரநாம (1008) அர்ச்சனை என்பன நடைபெறவுள்ளன.

ஹோமத்தில் பங்குபற்ற விரும்பும் அடியார்கள் அலுவலகத்தில் பெயர் நட்சத்திரங்களைப பதிவு செய்து கொள்ளலாமென்றும், மேடம், சிங்கம், துலாம், விருச்சிகம், தனுசு ராசிக்காரர்களுக்கு ஏழரைச்சனி ஆரம்பமாவதால் தவறாது வாரந்தோறும் சனி நீராடி விரதமிருந்து சனீஸ்வர பகவானின் தோஷ நிவர்த்திக்கு வெங்கடேச வரதராஜப் பெருமாளை துளசியினால் அர்ச்சித்து சனி பகவானை வன்னி இலை, நீலப்பூவினால் அர்ச்சித்து எள் தீபம் ஏற்றி, காகத்துக்கு எள் சாதம் வைத்து வணங்கி தோஷ நிவர்த்தி பெறலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# நடமாடும் சேவையில் இரத்ததான நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸாரின் ஏற்பாட்டில் ஏழாலை மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சுன்னாகம் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பீரிஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வசாவிளான் இராணுவத்தினர், சுன்னாகம் பொலிஸார், பொதுமக்கள் என சுமார் ஐம்பது பேர் வரையில் இரத்ததானம் செய்தனர். (14)


# ஆளும் கட்சியில் 5 எம்.பி.க்கள் மைத்திரியுடன் இணைய திட்டம்

இந்த வாரத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் மேலும் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு தமது ஆதரவை வெளியிடுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது

இதில் சில அமைச்சர்களும் அடங்குகின்றனர். இவர்கள் அரசாங்கத்தில் இருந்து விலகி தமது ஆதரவை மைத்திரிபாலவுக்கு வழங்கவுள்ளனர்.

இதற்கிடையில் மற்றும் ஒரு அரசாங்கத் தரப்பினர் மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடல்களை நடாத்தியுள்ள போதும் பல காரணங்களால் அரசாங்கத்துடன் தொடர்ந்தும் இணைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

(16) குறுக்கெழுத்துப்புதிர் நிரப்புக



01. நெருப்பு என்பதன் இன்னுமொரு சொல்
02. சோற்றுடன் உண்ண வேண்டியது
03. வயல் உழுவதற்கு உதவும் பிராணி
04. தபாலில் அனுப்புவது
05. வாசிப்பதற்கு பயன்வாய்ந்தது
06. தோழர்கள் என்பதன் மறுசொல்

(17) இடைவெளி நிரப்புக

01. தாகம் தீர்ப்பது தண்ணீர் எனின் பசியைப்போக்குவது ..............................
02. பாடசாலைக்கு அதிபர் எனின் நீதிமன்றத்திற்கு ..............................
03. பேருந்துக்கு சாரதியாயின் விமானத்திற்கு ..............................
04. பூனை மிருகம் எனின் தும்பி ..............................
05. தென்னைக்கு பிள்ளை எனின் பூனைக்கு ..............................

(18). வாக்கியம் அமைக்குக

01. குளம் ..............................
02. மணம் ..............................
03. மலை ..............................
04. மழை ..............................

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(1) 1. நூல் நிலையங்கள் 2. நம் பொருள் 3. பேணி 4. பூங்கா 5. பிறர்பொருளை 7.
(2) 1. ஏழை எளியவர் 2. பெரும் புகழும்
(03) 1. வடலி 2. இரையும்
(04) 1. சரி 2. பிழை
(05) 1. குற்றவாளி 2. குழை 3. பால் 4. இறைச்சியை
(06) 1. சரித்திரம் 2. நம்பிக்கை 3. ஒத்தாசை 4. தஞ்சம்
(07) 1. 1964ஆம் ஆண்டு 2. 85 3. 475ml 4. 40cm 5. 2, 3மடங்கு
5, 3வருடங்களில் 6. 2018 7. 200mL 8. நாற்பதாயிரத்து முப்பத்தொன்பது
9. (i) V (ii) ix 10. கனவுரு 11. 13m 12. பி.ப.3.40 13. 150.00 14. 250cm
(09) 1. ஆர்வத்தோடு 2. அல்லும் பகலும் 3. நன்மை 4. நீங்கள் 5. உலகத்தோடு ஒத்தே
6. கல்வி 7. நீங்கள்
(10) 1. இராமன், பரதன், இலக்குமனன், சத்துருக்கன் ஆகியோர் சகோதரர்கள் ஆவார்கள்
2. நன்றி தாயே! நன்றி
(11) 1. மாலைவேளையில் விளையாடுவோம் 2. உடற்பயிற்சி உற்சாகத்தை தரும் 3. குற்றவாளி தண்டனை பெற்றான்
(12) 1. கடிதம், காரியம், கிழமை, கீர்த்தி, கைதி, கௌதமன்
(13) 1. வெட்கத்தில் 2. அவமதித்தல்
(14) 1. புல்லும் 2. ஏரைத் 3. தெய்வம் 4. தலைமுழுகு
(15) 1. புயற்காற்று C..C.. என இரைத்தது 2. இங்கே வந்தவர் யார்?
(16) 1. நீங்கள் வருவீர்களா? நீ வருவாயா? 2. மாமரம் ஒன்று இருக்கின்றதா?
(17) 1. முகுத ஹரி லொகும் 2. நாசய 3. திஸ்பஹ
(18) 1. கவனமாயிரு 2. காலைவணக்கம்
(19) 1. Good Evening 2. Where is the Book?
(20) 1. 4 2. 2 3. 1 4. 3 5. 4 6. 4 7. 4 8. 2 9. 2 10. 2

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



தரம் - 3 பரீட்சை முன்னோடி- 2014

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



(01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

வெயில் தணிந்தது. வானம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது. திடீரென மரங்கள் அசைந்து ஆடின. சாதாரணமாக வீசிய காற்று பலமாக வீசத்தொடங்கியது. தூசுகள், கடதாசிகள், எல்லாம் மேலே பறந்தன. மரங்கள் சரிந்து ஆடி இயலாமல் முறிந்தன. கூரைத்தகடுகள் காற்றில் பறந்தன. மழையும் பெய்யத் தொடங்கியது ஓ ஓ என்ற சத்தத்துடன் காற்று, புயலாக மாறியது.

01. இந்த பந்தியில் பல சேதங்களை ஏற்படுத்தியது எது? ..............................
02. மரங்கள் என்ற சொல்லின் ஒருமைச்சொல் எது? ..............................
03. எது மப்பும் மந்தாரமுமாய் காணப்பட்டது? ..............................
04. மரங்கள் அசைந்தாடின என்ற தொடரை ஒருமையில் எழுதுக?
..............................
05. மழை என்பதற்குப் பொருத்தமான எதிர்ச்சொல்லை தருக? ..............................
06. சத்தம் என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக..............................

(02) பாடலுக்குப் பொருத்தமான சொற்களை பாவித்து பாடலை அமைத்து பாடுக

பார்த்த அழகு .............. கைக்குள் ..............................விசிறி
..............................ஓலை விசிறி ..............................தரும் விசிறி
.............................. போக்கும் விசிறி எங்கும் .............................. விசிறி
விரும்பித் .............. விசிறி எல்லோரும் .............................. விசிறி

(03). படத்தைப்பார்த்து வினாக்களை உருவாக்குக



01. ..............................
02. ..............................
03. ..............................
04. ..............................

(04) பின்வரும் சுயவிபர படிவத்தை பூர்த்தி செய்க

01. மாணவர் பெயர் : - ..............................
02. முகவரி : - ..............................
03. தொலைபேசி இலக்கம் : - ..............................
04. பிறந்ததிகதி :- .............................. 05. வயது ..............................
06. கல்வி கற்கும் தரம் :- .............................. 07. பிரிவு ..............................
08. கல்வி கற்கும் பாடசாலை :- ..............................
09. கல்வி கற்கும் பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் :- ..............................
10. தந்தையார் பெயர் :- ..............................
11. தாயார் பெயர்:- ..............................
12. சகோதரர்களின் பெயர்கள் :- ..............................

மேலே தரப்பட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என தெரிவித்துக் கொள்கிறேன்

..............................
மாணவரது கையொப்பம்


**(05) இடைவெளி நிரப்புக**

01. ஐந்தில் ........................ ஐம்பதில் வளையுமா?
02. யானைக்கும் அடி ........................
03. ஏட்டுச் ........................ கறிக்கு உதவாது
04. எட்டாக்கனிக்கு ........................ விடாதே
05. விளையும் பயிரை ........................ தெரியும்

**(06) வேறுபட்ட சொல்லின் கீழ் கோடிடுக**

01. ஆகாரம், உணவு, சோறு, சாப்பாடு
02. அரசன், கோன், அமைச்சன், மன்னன்
03. வீதி, சாலை, தெரு, தண்டவாளம்
04. அன்னை, தாய், மாதா, பிதா
05. மரம், ஆலம், தரு, விருட்சம்

**(07). படத்தை பார்த்து கட்டத்துள் கொடுக்கப்பட்ட சொற்களை வைத்து கதையை பூரணப்படுத்துக**



| |
|---|
| ஏறியது |
| குருவியை |
| பூனையும் |
| பசியால் |
| கண்டது |
| உணவு |

01. பூனை ஒன்று ................ வாடிப்போய் இருந்தது
02. எப்படி ................ தேடிக்கொள்வது என யோசித்தது
03. அந்தப்பூனை மரத்தில் இருந்த குருவியை ................
04. பூனை மெதுவாக மரத்தில் ................
05. பூனை ................ பிடிக்க எட்டியது
06. பூனையைக் கண்டு குருவி பறந்திட ................ கீழே விழுந்தது

**(08). பாடலில் வரும் இடைவெளிகளை பூர்த்தி செய்க**

01. பள்ளி செல்லும் பிள்ளையே
................ ஒன்று கற்றுக்கொள்
நல்ல ................ விதிகளை
நன்கு ................ வைத்துக்கொள்

02. நடக்கும் ................ வழியிலே
நாளும் ................ நடக்கனும்
................ இடத்தில் கவனமாய்க்
................ போகத் தெரியனும்

**(09). கடிதம் என்ற பாடத்தை கற்று பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்து சொற்களை தருக**

01. புத்தகம் ................ 02. நூல் நிலையம் ................
03. அறிவுரை ................ 04. பாடசாலை ................
05. ஆவல் ................ 06. இரவு ................



**(10). வினாக்களுக்கு விடை தருக**

01. கிராமிய விளையாட்டுக்கள் இரண்டின் பெயர்களை குறிப்பிடுக
1. ........................ 2. ........................
02. விளையாட்டின் மூலம் கிடைக்கும் நல்ல பண்பு ஒன்றை குறிப்பிடுக
1. ........................
03. கிளித்தட்டு விளையாட்டில் நான்கு பேர் விளையாடுவதற்கு எத்தனை கட்டங்கள் இடப்பட வேண்டும்?
........................
04. கிளித்தட்டு விளையாட்டில் ஐந்து பேர் விளையாடுவதற்கு எத்தனை கட்டங்கள் தேவை?
........................
05. கிளித்தட்டு விளையாட்டில் மறிக்கும் அணியின் தலைவனை எவ்வாறு அழைப்போம்
........................

**(11). பின்வரும் வாக்கியங்களில் உள்ள பயனிலைச் சொற்களை தெரிந்து எழுதுக**

01. பந்து தொலைவில் விழுந்தது (........................)
02. நண்பர்கள் மைதான ஓரத்தில் அமர்ந்தார்கள் (........................)
03. அமீர் துடுப்பெடுத்து ஆடினான் (........................)
04. கடிதத்தை நிறைவு செய்கிறேன் (........................)
05. நீர் எண்ணெய்ப் பரப்புக்கு மேலாக நகருகிறது (........................)

**(12). உழவுத்தொழில் என்ற பாடத்தை அடிப்படையாகக் கொண்டு சொற்களுக்கு ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக**

01. நீர் ................ 02. விவசாயம் ................
03. உழவர்கள் ................ 04. பசளை ................
05. வருடம் ................ 06. உணவு ................

**(13) பிழைகளை திருத்தி எழுதுக**

01. காய்கரிகள் ................ 02. இளங்கைதேசம் ................
03. உழவத்தொலிழ் ................ 04. வாரஇதழ் ................
05. அறைவாசி ................ 06. இக்கறை ................

**(14). எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சொற்களை ஆக்கி எழுதுக**

01. ரு, வ, கி, ற, ன, ர், ன் ........................
02. வ, வே, ர, ன, ற், ற ........................
03. க, ர், நெ, தி, ள், ற், க ........................
04. ர, ஆ, ம், மா, ப, கி, ன ........................
05. தோ, ழ், ந், ம், கி, ம ........................
06. னி, க், ழ, கி, ச, மை ........................

**(15). பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக**

01. உனது பெயர் என்ன ................ 02. நான் உண்மைப் பேசினேன் ................
03. நீ எங்கே சென்றாய் ................ 04. பாடம் படித்தார்களா................
05. மிகப்பெரிய பறவை தீக்கோழியாகும் ................ 05. உனது பேனா எது ................



அண்மையில் பெய்த கன மழையால் கைதடி மேற்கில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் சர்வதேச சரஸ்வதி அமைப்பினால் ரூபா 140,000 நிதி உதவியில் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்ட போது.... (51)

# குப்பிளானில் 130 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

குப்பிளான் தனிக்கிராம உதயத்தின் 50 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு லண்டன் விக்கினேஸ்வரா மன்றத்தினரால் யாழ். குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் சுமார் 130 மாணவர்களுக்கு இலவச கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வு கடந்த 29 ஆம் திகதி காலை 09.30 மணி முதல் மேற்படி பாடசாலையின் மண்டபத்தில் உபஅதிபர் திருமதி.விஜயராணி கிருபாரூபன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் குப்பிளான் தெற்கு பிரதேச கிராம உத்தியோகத்தராகவும், தற்போது ஈவினைப் பிரதேச கிராம உத்தியோகத்தராகவும் கடமையாற்றும் சோ.பரமநாதன் மற்றும் குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலய ஓய்வு நிலை உப அதிபர் திருமதி ஞானதீபம் பரமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கலந்து கொண்ட விருந்தினர்களும் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஓய்வு நிலைப பொது முகாமையாளர் ந.சிவலிங்கம், குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கச் செயலாளர் மகாலிங்கம் விபுலாநந்தன், பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர் சி.கணேசநாதன் மற்றும் உப அதிபர் ஆகியோர் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கினர்.

ஒவ்வொரு மாணவருக்கும் சுமார் 400 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் மழைக்கு மத்தியிலும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

# தொழிலுரிமை, வாழ்வுரிமையை பெற்றுத் தந்தவர் அமைச்சரே

## தென்மராட்சி கடற்றொழிலாளர் சங்கபிரதிநிதிகள் புகழாரம்



(தென்மராட்சி)

தென்மராட்சி கடற்றொழிலாளர்களுக்கு தொழில் உரிமையை மட்டுமன்றி வாழ்வுரிமையையும் பெற்றுத் தந்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என தென மராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்திற்கு நேற்றுமுன்தினம் வருகை தந்திருந்த தென்மராட்சி கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தென்மராட்சியில் மக்கள் இற்றைவரை நிம்மதியாக வாழ்வதற்கு காரணகர்த்தாவாக இருப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே.

அத்துடன், எமக்கான தொழில உரிமையை பெற்றுத்தந்தவர் மட்டுமன்றி அவரே எமக்கான வாழ்வுரிமையையும் பெற்றுத்தந்துள்ளார்.

அதுமட்டுமன்றி நாம் அவலப்பட்ட வேளைகளில் எல்லாம் எமது பகுதிகளுக்கு நேரில் வருகைதந்து எமது வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு பல்வேறுபட்ட உதவிகளையும் கிடைக்கச் செய்துள்ளார்.

அடுத்தாண்டில் 250 கோடி ரூபா செலவில் தென்மராட்சி மட்டுமன்றி வடமாகாண கடற்றொழிலாளர்களது வாழ்வாதார, பொருளாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்துவதாக அமைச்சர் தெரிவித்துள்ள நிலையில் குறித்த திட்டத்தின் ஊடாக எமது பகுதிகளில் பாரிய முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் காணுமென்ற நம்பிக்கை தமக்கிருப்பதாகவும் அவர்கள் இதன் போது சுட்டிக்காட்டினர்.

# துரிதகதியில் இடம்பெறும் திருப்பணி வேலைகள்

காரைநகர் மணற்காடு கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான திருப்பணிவேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.36 மணி முதல் 10.45 மணி வரை உள்ள சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி கிரியைகள் ஆரம்பமாகி 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி வரை எண்ணெய்க்காப்பு இடம்பெறும்.

கும்பாபிஷேக தினத்தன்று இலங்கை இந்திய தலைசிறந்த நாதஸ்வர தவில் வித்துவான்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். விசேடமாக யானை, குதிரை, பசு முதலானவை கும்பா பிஷேக நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளதுடன் தென்னிந்திய நர்த்தகிகள் கலந்து கொள்ளும் பரதநாட்டிய நிகழ்வுகளும் இடம்பெறும்(10)

# முரசின் இன்றைய பலன்

(08.12.2014 திங்கட்கிழமை)

ஜய வருஷம் கார்த்திகை மாதம் 22 ஆம் திகதி.
துதியை / சித்தாமிர்தம்.
திருவாதிரை நட்சத்திரம் பின்னிரவு 02.33 வரை. பின் புனர்பூசம்.
இராகு காலம 07.47 - 09.17 வரை. சுபநேரம 12.17 - 01.47 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
வீண் பிரச்சினையால் மன நிம்மதி குலையும், பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றம் உண்டு.

**ரிஷபம்**
தொழிலில் பட்ட சிக்கல் அகன்று விடல், வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படும்.

**மிதுனம்**
அயலவருடனான நட்பில் அவதானம் தேவை, புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட விரும்புதல்.

**கடகம்**
வேலைப்பளு நீங்க கஷ்ரப் படல், உதவிகள் கிட்டும்.

**சிம்மம்**
பிரயாணத்தைக் கைவிடல் நன்று, பழைய நிலுவைகளில் ஒருபகுதி கைக்கெட்டும்.

**கன்னி**
புதிய மனை அமைக்க நம்பிக்கை பிறத்தல், தடைப்பட்ட பயணத்தை மீண்டும் தொடர விரும்புதல்.

**துலாம்**
வாகனயோகம் கிட்டும், தொழில ரீதியில் உங்கள் பேச்சிற்கு மதிப்புக்கிடைக்கும்.

**விருச்சிகம்**
உதவி செய்ய பின்னழித்தல், அடுததவர்களின் பொறுப்பை ஏற்க முன்வரவேண்டாம்.

**தனுசு**
எடுத்த முயற்சியில் பலன் கிடைககும், நண்பர்கள், உறவினர்களுடன் நிதானமாகப்பழகுவது நன்று.

**மகரம்**
மனம் நோகும்படி குடும்பப் பிரச்சினை தலைதூக்கும், நன்கு திட்டமிட்டதால் வேலைப்பளு குறைத்தல்.

**கும்பம்**
ஆயுத பாவனையில் அவதானம் தேவை, தொழிலில் சாமர்த்தியம் தேவை.

**மீனம்**
மன அழுத்தம் குறைவடையும், பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைச் சேர்க்கும்.

# பாலியல் ரீதியிலான தொல்லை அமெரிக்க இராணுவத்தில் அதிகரிப்பு

(வொஷிங்டன்)

அமெரிக்க இராணுவத்தில் பாலியல் ரீதியான தாக்குதல்கள் கடந்த வருடத்தை ஒப்பிட்டு பார்க்கையில், இந்த வருடம் 8 சதவீதம் அதிகரித்துள்ளது.

பாலியல் தொல்லை காரணமாக 5 ஆயிரத்து 983 பேர் பாதிக்கப்பட்டதாகவும், அவர்களில் சுமார் மூன்றில் இரு பகுதியினர் தாம் பழிவாங்கும் நடவடிக்கையை எதிர்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதே நேரத்தில் சுமார் 19 ஆயிரம் பேர் தாம் விரும்பததகாத பாலியல் தொடர்பை அனுபவிக்க நேர்ந்ததாகவும் கவலை தெரிவித்துள்ளனர். அவர்களில் 10, ஆயிரத்து 500 பேர் ஆண்கள் 8 ஆயிரத்து 500 பெண்கள் 62 சதவீதம் பேர் பழிவாங்கலை எதிரகொண்டுள்ளனர். பாலியல் ரீதியான தொல்லை குறித்து புகார் செய்தால் மேலும் பல பழிவாங்குதலை எதிர்கொள்ள நேரிட்டதாகவும் கூறியுள்ளனர். இது போன்று பாலியல் தொல்லைக்கு ஆளான பெண்களில் 62 சதவீதம் பேர் பழி வாங்கலை எதிர் கொள்ள நேரிட்டதாம். இந்த புகார் காரணமாக அமெரிக்க இராணுவ உயர் அதிகாரிகள் கவுனசிலிங் நடாத்த திட்டமிட்டுள்ளனர். மேலும் இது தொடராமல் இருக்க தேவையான நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



# மத்திய அமெரிக்க நாடுகளில் 6.4 ரிக்டரில் பாரிய பூகம்பம்

(பனாமா)

பனாமா, கோஸ்டாரிகா, குவாதாமாலா உட்பட அமெரிக்காவின் மையப்பகுதியில் அமைந்துள்ள நாடுகள் நேற்று பலத்த பூகம்பத்தால் குலுங்கின. புவேர்ட்டோ அர்முலெஸ் நகருக்கு 38 கி.மீ. தென்கிழக்கே பசிபிக் பெருங்கடலில் மையம் கொண்டு முதல் நில அதிர்வு உணரப்பட்டது.

கோஸ்டாரிகாவின் பசுபிக் கரைப்பகுதி மற்றும் நாட்டின் தெற்குப்பகுதி மற்றும் பனாமா நகரங்களான போகாஸ் டெல் டோரோ, சிருக்வி ஆகிய பகுதிகளில் பூகம்பம் கடுமையாக உணரப்பட்டதாகவும், சான் ஜோஸ் பகுதியில் மிதமாகவும் உணரப்பட்டது. கோஸ்டாரிகா நாட்டின் எல்லையில் உள்ள சிருக்வி மாகாணத்தில் நிலநடுக்கம் 6.4 ரிக்டர் பதிவானதாக தேசிய பூகோள ... வியல் பல்கலைக்கழக நிறுவனம் அறிவித்துள்ளது.

கோஸ்டாரிகாவில் 6 ரிக்டர், குவாதாமாலாவில் 4.7 ரிக்டர் என்ற அளவிற்கு நில அதிர்வுக்கு பூகம்பம் ஏற்பட்டதாக தேசிய நிலஅதிர்வு வலையமைப்பு தெரிவித்துள்ளது.

# பாகிஸ்தான் தாக்குதலில் அல்கொய்தா தலைவர் பலி



அல்கொய்தா அமைப்பின் உலகளாவிய நடவடிக்கைகளுக்கான தலைவர் அட்னான் க்ரிஜுமா, பாகிஸ்தான் இராணுவத் தாக்குதலில் கொல்லப்பட்டதாக இராணுவம் நேற்று முன்தினம் கூறியுள்ளது.

சவுதியில் பிறந்த அவர், நியூயோர்க் சுரங்க ரயிலில் குண்டு வெடிப்பு நிகழ்த்தத் திட்டமிட்டதாக அமெரிக்காவால் தேடப்பட்டு வந்தவர்.

இதுகுறித்து பாகிஸ்தான் இராணுவ மக்கள் தொடர்புப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தெற்கு வஜிரிஸ்தானின் பழங்குடியினப் பகுதியில் இராணுவம் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையின்போது அட்னான் க்ரிஜுமா கொல்லப்பட்டார்.

அவரது உதவியாளரும், அந்த இடத்தில் அவரைத் தங்க வைத்திருந்த நபரும் இந்தத் தாக்குதலில் உயிரிழந்தனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அரசு, அட்னான் குறித்து தகவல் தெரிவிப்பவர்களுக்கு 50 இலட்சம் டொலர்கள் (ரூ.31 கோடி) பரிசுத் தொகை வழங்கப்படும் என அறிவித்திருந்தது.

# ஊழலில் சீன அரசியல் தலைவர் 84 கோடி சொத்துக்கள் பறிமுதல்



ஊழல் குற்றச்சாட்டின்பேரில் சீனாவின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரான ஜுஹு யாங் காங் (வயது72) கைது செய்யப்பட்டார். அவரது குடும்பத்தினரிடம் இருந்து 84,000 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சீன அதிபராக ஜி ஜின்பிங் பொறுப்பேற்ற பிறகு ஊழலை ஒழிக்க முன்னுரிமை அளித்து வருகிறார். அவரது நடவடிக்கையின் பேரில் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக பல்வேறு துறைகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், மூத்த அதிகாரிகள் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

அந்த வரிசையில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஜுஹு யாங்காங் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டார். கட்சியின் அடிப்படை உறுப்பினர் உட்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் அவர் நீக்கப்பட்டார்.

சீனாவின் மிக உயர்ந்த ஆணையமான 9 பேர் கொண்ட நிலைக்குழுவிலும் அவர் இடம் பெற்றிருந்தார். அவர் பொறுப்பில் இருந்தபோது அதிகாரத்தை முறை கேடாக பயன்படுத்தி வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்ததாக புகார்கள் எழுந்தன.

இதுதொடர்பாக ஓராண்டுக்கும் மேலாக விசாரணை நடை பெற்று வந்தது. இந்த விசாரணையில் பல்வேறு பகுதிகளில் அவரும் அவரது குடும்பத்தினரும் பல்லாயிரம் கோடி மதிப்புள்ள சொத்துகளை வாங்கியிருப்பது ஆதார பூர்வமாக நிரூபிக்கப்பட்டது.

பொதுவாக சீன அரசியலில் ஓய்வுபெற்றவர்கள் மீது குற்றம் சாட்டுவது, கைது நடவடிக்கை மேற்கொள்வது கிடையாது. அந்த மரபை மீறி ஜுஹு யாங் காங் கைது செய்யப்பட்டுள்ளார். அவரது குடும்பத்தினரிடம் இருந்து 84,000 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துகள் பறிமுதல் செயயப்பட்டுள்ளன.

# பெங்களூரு ஐ.ஐ.எஸ்.சி. முதலிடம்

'தி டைம்ஸ் உயர் கல்வி' பத்திரிகை வெளியிட்டுள்ள சிறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான பட்டியலில் இந்திய அளவில் முதலிடத்தை பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் (ஐ.ஐ.எஸ்.சி) பெற்றுள்ளது.

சிறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான பட்டியலை தி டைம்ஸ் உயர் கல்வி பத்திரிகை ஆண்டு தோறும் வெளியிடுகிறது. பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா உட்பட 22 வளரும் நாடுகளில் உள்ள உயர் கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. அதில் முதலிடத்தை சீனாவின் பீகிங் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. 25-ஆவது இடத்தை இந்திய அறிவியல் கல்வி நிறுவனமும் (இந்திய அளவில் முதலிடம்), 37-ஆவது இடத்தை மும்பை ஐ.ஐ.டி.யும், 38ஆவது இடத்தை ரூர்க்கி ஐ.ஐ.டி.யும். 39-வது இடத்தை சண்டிகரின் பஞ்சாப் பல்கலைக்கழகமும், 43ஆவது இடத்தை காரக்பூர் ஐ.ஐ.டி.யும், 44ஆவது இடத்தை சென்னை ஐ.ஐ.டி.யும் பெற்றுள்ளன.

இது தவிர டில்லி ஐ.ஐ.டி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், கான்பூர் ஐ.ஐ.டி, அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகம், குவாஹாட்டி ஐ.ஐ.டி. ஆகியவை முறையே 56, 71, 74, 78, 98-ஆவது இடங்களைப் பெற்றுள்ளன.

# பெல்ஜியம் முன்னாள் ராணி மாரடைப்பால் மரணம்



பெல்ஜியம் நாட்டின் முன்னாள் ராணி பாபியாலோ மாரடைப்பால் காலமானார்.

பெல்ஜியம் நாட்டின் முன்னாள் அரசர் பாவுடோவின் மனைவி பாபியாலோ. ஸ்பெயின் நாட்டில் பிறந்தவரான பாபியாலோ, பெல்ஜியம் அரசர் பாவுடோவின் மறைந்தவுடன், புருசெல்ஸ் நகரில் உள்ள ஸ்டாய் வென்பெர்க் அரண்மனையில் வசித்து வந்தார்.

அவருக்கு பெல்ஜியம் அரசு ஓய்வூதியம் அளித்து வந்தது. பாபியாலோ கடந்த சில ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டு இருந்தார்.


இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு அவர் மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைந்தார். அவருக்கு வயது 86. இந்த தகவலை பெல்ஜியம் அரசர் பிலிப் புருசெல்ஸில் வெளியிட்டுள்ளார்.

# மகிந்தவுக்கு எதிர்ப்பு

(சென்னை)

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் 3ஆவது முறையாக போட்டியிடும் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ, தேர்தலில் வெற்றி பெறுவதற்காக டிசம்பர் 10ஆம் திகதி திருப்பதியில் சுவாமி தரிசனம் செய்ய உள்ளார். இதற்கு பா.ம.க, ம.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. மேலும்ராஜபக்ஷ இந்தியா வருவதற்கு அளிக்கப்பட்டுள்ள அனுமதியை மத்திய அரசு இரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி உள்ள அக்கட்சிகள், ராஜபக்ஷவின் வருகையை எதிர்த்து கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடாத்த உள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

# விண்ணில் ஏவப்பட்டது இஸ்ரோவின் ஜிசாட் – 16




தொலைத்தொடர்பு வசதியை மேம்படுத்த வகை செய்யும் இந்தியாவின் ஜிசாட்-16 செயற்கைக்கோள், பிரெஞ்சு கயானாவிலிருந்து நேற்று வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

இஸ்ரோ (இந்திய விண்வெளி ஆய்வுக் கழகம்) தயார்த்துள்ள இந்த செயற்கைக்கோள், மோசமான வானிலை காரணமாக, இரண்டு நாட்கள் தாமதமாக செலுத்தப்பட்டன.

பிரான்ஸ் நாட்டின் பிரெஞ்சு கயான்னா நகரில் கவுரு ரொக்கெட் ஏவுதளத்திலிருந்து ஏரியான் 5விஏ221 ரொக்கெட் மூலம் இந்த செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

சுமார் 880 கோடி ரூபா செலவிலான ஜிசாட்-16 செயற்கைக்கோளுடன் ஸ்பேஸ் சிஸ்டம்ஸ்லாரல் தயாரித்துள்ள டைரக்ட்-14 என்ற செயற்கைக்கோளையும் ஏரியான் 5 ரொக்கெட் விண்ணில் செலுத்தியது. இந்த டைரக்ட்-14 செயற்கைக்கோள், அமெரிக்காவில் நேரடியாக வீட்டுக்குத் தொலைக்காட்சி சேவையை வழங்கப் பயன்படுத்தப்படும்.

# சட்ட ஒழுங்கு விதிகளை பொலிஸார் மீறக்கூடாது

## காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

மக்களின் சேவைகள் நல்ல முறையில் செய்யப்பட வேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதியும், அரசாங்கமும், அரச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்கினார்கள். இந்த வகையில் பொலிஸாரும் தமது சேவையை நல்லமுறையில் மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேயே பொலிஸாருக்கும் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன. எனவே சட்ட ஒழுங்கு விதிகளை பொலிஸார் மீறக்கூடாது என காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிலாந்த ஜயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் உள்ள சேவை மூப்பின் அடிப்படையில் உள்ள பொலிஸாருக்கு மோட்டார சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு தெல்லிப்பளை பொலிஸ் வளாகத்தில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் என்.எம்.நிசாம் தலைமையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மோட்டார் சைக்கிள்கள் 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் வழங்கப்பட்டுள்ளன. இதனால் அரசாங்கம் சுமார் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா நட்டமடைகிறது. இதனை அரசாங்கம் செய்வதன் நோக்கம் பொலிஸாரின் போக்கு வரத்து வசதிகளை மேம்படுத்தி அதன் மூலம் உரிய நேரத்திற்கு வீட்டில் இருந்து கடமைக்கு வந்து மக்களுடைய சேவைகள் நல்ல முறையில் இடம்பெற வேண்டும் என்பதற்காகவே.

பொலிஸாரும் கூட சட்ட ஒழுங்கு விதிகளை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும். யாரும் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றியோ, காப்புறுதி வரி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனங்களை செலுத்த முற்படக்கூடாது அப்படி யாராவது நடக்க முற்பட்டால் அவர்கள் மீதும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார். (63)

# பாராட்டு விழா



(தென்மராட்சி)

வைத்திய சேவையில் 45 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்புற சேவையாற்றி ஓய்வு பெற்ற தென்மராட்சியின் மைந்தன் வைத்திய கலாநிதி ச. அம்பிகைபாகனுக்கான பாராட்டு விழா எதிர்வரும்14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் அமைந்துள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற உள்ளது. சமூக ஆர்வலர்களால் பொதுமக்களின் பங்களிப்புடன் நடைபெறவுள்ள இந்நிகழ்வினை முன்னெடுக்கவென அண்மையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் யோ. ஜெயக்குமார் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

செயலாளராக வை.இராசரத்தினம், பொருளாளராக கா. சிவஞான சுந்தரம் மற்றும் 10 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (11)

# மோட்டார் சைக்கிள் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம் பொலிஸ் தலைமையகத்தில் 30 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாங்குளம் பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான விஜயரத்தினவின் தலைமையில் கடந்த சனிக்கிழமை இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதில் மாங்குளம், கனகராஜன் குளம், புளியங்குளம், ஓமந்தை, நெடுங்கேணி, ஐயன் குளம், மல்லாவி ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த 30 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு முதல் கட்டமாக மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# மைத்திரிக்கு ஆதரவு வழங்க பொன்சேகாவின் நிபந்தனை

(கொழும்பு)

பீல்ட் மார்ஷல் பட்டமும், பாதுகாப்பு அமைச்சர் பதவியும் தரப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே, எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு, சரத் பொன்சேகா ஆதரவு அளித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு, ஆதரவளிப்பதாக, முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

இதுதொடர்பாக அவர் மைத்திரிபால சிறிசேனவுடன் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றையும் செய்து கொண்டிருந்தார்.

இதன் பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய மைத்திரிபால சிறிசேன, தாம் ஆட்சிக்கு வந்ததும், சரத் பொன்சேகாவிடம் இருந்து பறிக்கப்பட்ட ஜெனரல் பட்டம் உள்ளிட்ட அனைத்து இராணுவ விருதுகள், சலுகைகளையும் மீள வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்.

அத்துடன், அவருக்கு மீண்டும் குடியுரிமை வழங்கப்படும் என்றும் மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

இந்நிலையில், சரத் பொன்சேகா தனக்கு பீல்ட் மார்ஷல் பட்டமும், பாதுகாப்பு அமைச்சர் பதவியும் தரப்பட வேண்டும் என்று கோரியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தம்மைத் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்க வேண்டும் என்றும், ரணில் விக்ரமசிங்கவிடம் சரத் பொன்சேகா கோரியிருக்கிறார்.

அரசியலமைப்பு மாற்றங்களின் போது, தனக்குப் பாதுகாப்பு அமைச்சர் பதவி தரப்பட வேண்டும் என்றும் சரத் பொன்சேகா தரப்பில் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்தால், உடனடியாகவே, போரில் ஆற்றிய பங்களிப்புக்காக, சரத் பொன்சேகாவுக்கு பீல்ட் மார்ஷல் என்ற உயர் இராணுவப் பட்டம் அளிக்கப்பட வாய்ப்புகள் உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை இராணுவத்தில் இதுவரை பீல்ட் மார்ஷல் என்ற உயரிய பட்டம் எவருக்கும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பெண்ணின் ஆடைகளை களைந்து தாக்குதல்

## தாயும், மகனும் விளக்கமறியலில்

(துன்னாலை)

வடமராட்சி-துன்னாலை, பறையான் குளம் பகுதியில் பெண் ஒருவரைத் தாக்கி ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக்கிய குற்றச்சாட்டில் கைதான அதே பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய நபரையும், இச்செயலுக்கு உடந்தையாகச் செயற்பட்ட குறித்த நபரின் தாயையும் 3 மாதங்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஜெ.கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

2011ஆம் ஆண்டு நெல்லியடி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு மீதான விசாரணை கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

2011 ஆம் ஆண்டு மேற்படி பகுதியில் வசித்து வரும் பெண்ணுடன் முரண்பட்டு 19 வயதுடைய சந்தேகநபர் அப் பெண்ணைக் கடுமையாகத் தாக்கி, ஆடைகளைக் களைந்து நிர்வாணப்படுத்தினர் எனக் கூறப்படுகின்றது.

இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். மூன்று வருடங்களாக தலைமறைவாக வாழ்ந்து வந்த மேற்படி நபரை, பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை துன்னாலைப் பகுதியில் வைத்து கைது செய்து உடனடியாகவே நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர்.

## இலங்கையின்...

பக்ஷ, சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்ரமசிங்க, மைத்திரிபால சிறிசேன ஆகியோரைச் சந்திப்பதற்கு டோவல் இந்தப் பயணத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

அவரது பயணம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மறைமுகத் தலையீடாக அமையுமா என்று அரசியல் வட்டாரங்களில் சந்தேகத்துடன் பார்க்கப்பட்டது.

டோவல் முதலில் சந்திரிகாவை சந்தித்துப் பேசினார்.

அவருடனான 15 நிமிட தனிப்பட்ட பேச்சுக்களை அடுத்து, எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்தினார்.

பின்னர், ரணில் விக்ரமசிங்கவையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும், கொழும்பிலுள்ள தாஜ் விடுதியில் சந்தித்துப் பேசினார்.

ரணிலுடன் அவர் பேசியபோது மலிக் சமரவிக்கிரம மற்றும் மங்கள சமரவீர ஆகியோரும் உடனிருந்தனர்.

பின்னர், மலிக்கும், மங்களவும் விலகிச் சென்ற பின்னர், ரணிலுடன் டோவல் தனியாக பேச்சு நடத்தினார்.

அதையடுத்து, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவையும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார் டோவல்.

கொழும்பில் அஜித் டோவல் தலைவர்களுடன் தனித்தனியாக நடத்திய பேச்சுக்கள் பற்றிய விபரங்கள் இன்னமும் இரகசியமாகவே உள்ளன.

டோவல் புறப்பட்டுச் சென்று இரண்டு நாட்கள் கழித்து, இந்திய அரசாங்கம் தெற்காசியாவின் கடல் பாதுகாப்புக் குறித்து இந்தியா கவலை கொள்வதாகவும், இலங்கையைச் சுற்றிய கடற்பகுதியின் நடமாட்டங்கள் தொடர்பாக உன்னிப்பாக கண்காணிக்கப்படுவதாகவும் இந்தியக் கடற்படைத் தளபதி, தெரிவித்திருந்தார்.

இந்தியப் பெருங்கடலில் சீன நீர்மூழ்கிகளின் நடமாட்டம் இந்தியாவுக்குப் பெரும் கவலையை அளிப்பதாகவும் அவர் கூறியிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், இலங்கையில் அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலைமைகளின் முன்னேற்றம் குறித்து, இந்தியா மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாக, தெரிகிறது.

மேலதிகமாக, தேர்தல் காலத்தில் இலங்கையில் உள்ள தமிழர்களின் பாதுகாப்பு விடயத்திலும் புதுடில்லி கூடுதல் கவனம் செலுத்துகிறது என்றும் கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

## 3 முக்கிய...

நனை மக்களே தீர்மானிக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எந்தவொரு வாக்காளரது உரிமையிலும் தலையிடவில்லை. ஆனால் மேற். குறித்த விடயங்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தேர்தலில் வெற்றிபெற்றால் ஜனாதிபதியையோ, படையினரையோ சர்வதேச நீதிமன்றில் நிறுத்தமாட்டோமென எதிரணி தெரிவித்து வருகின்ற போதிலும், அவர்கள் அதனைச் செய்யாமல் விடுவதற்கு எந்த உத்தரவாதமும் இல்லையெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பேருந்து...

தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

## மைத்திரியை...

கூறியுள்ளார். ஆனால், இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிரணியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடன்பாடு எதிலும் கைச்சாத்திடாத போதிலும், பொதுவேட்பாளருக்கு ஆதரவளிப்பார்கள் என்று தாம் நம்புவதாகவும் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக, மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கும் எதிரணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்தும் அதிகாரபூர்வமற்ற கலந்துரையாடல்களை நடத்தி வருவதாக, எதிரணியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## பட்டப் பகலில்....

அருகில் உள்ள உறவினர்களின் வீட்டுக்கு மதிய உணவுக்காகச் சென்றிருந்த சமயம் யன்னல் கம்பியை வளைத்து நுழைந்த திருடர்கள் பீரோவில் வைக்கப்பட்டிருந்த நகைகளைத் திருடிச் சென்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட, குற்றத்தடுப்பு பொலிஸார், மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டனர். சந்தேக நபர்களைப் பிடித்து அவர்களின் கைவிரல் அடையாளங்களைப் பெற்றுள்ளனர் எனத் தெரிவித்த பொறுப்பதிகாரி, இப்பகல் கொள்ளையுடன் தொடர்புடைய நபர்களை விரைவில் கைது செய்வோம் எனத் தெரிவித்தனர்.

## ஜனாதிபதித்...

யிலும், ஆயுர்வேத சுற்று வட்டத்தில் இருந்து வெலிக்கடை வரையான கொட்டா வீதியிலும் வாகனப் போக்குவரத்து ஒரு ஒழுங்கைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தக் காலப் பகுதியில் குறித்த பாதைகளின் ஊடாக சிறிய ரக வாகனங்கள் மற்றும் பயணிகள் பேருந்துகளுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என்றும், கனரக வாகனங்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் அதிகளவில் அரசவள பயன்பாடு

## தேர்தல்கள் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் பிரசார நடவடிக்கைகளுக்கு அரச வளங்கள் மற்றும் அதிகாரிகளை பயன்படுத்துவது தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் 22 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாட்டு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

அரச வளங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை தொடர்பில் 4 முறைப்பாடுகளும், அரச உத்தியோகத்தர்களை பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியமை தொடர்பில் 9 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

மேலும், அரச உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கல் மற்றும் முறையற்ற விதத்தில் பதவி உயர்வு வழங்கல் என்பன தொடர்பில் 13 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக முறைப்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மொத்தமாக இதுவரையில் 52 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அவற்றில், சிறு சம்பவங்கள் தொடர்பில் 39 முறைப்பாடுகளும், பாரதூரமான சம்பவங்கள் தொடர்பில் 13 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகம், அச்சுறுத்தல் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியமை போன்ற சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளில் அதிகமாக ஏழு முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், கம்பஹா, கண்டி, குருநாகல், களுத்துறை, புத்தளம் மற்றும் பொலன்நறுவை ஆகிய மாவட்டங்களிலும் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மூன்றாவது ஒருநாள் போட்டி இலங்கை அணி அபாரவெற்றி



இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது சர்வதேச ஒருநாள் போட்டியில் இலங்கை அணி ஆறு விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டத்தில் ஜேம்ஸ் டெய்லர் 90 ஓட்டங்களையும் இயன் மோகல் 62 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இந்நிலையில் இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை அணியின் பந்து வீச்சில் ரங்கன ஹேரத், டி.எம்.டில்ஷான் மற்றும் அஜந்த மென்டிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

266 ஓட்டங்களை இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை 49.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 267 ஓட்டங்களைப் பெற்று வெற்றியினை தனதாக்கியது.

குமார் சங்கக்கார 86 ஓட்டங்களையும் அணித் தலைவர அஞ்சலோ மத்தியூஸ் 51 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொடுத்தனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில் கிறிஸ் ஜோர்தான் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் நாயகனாக குமார் சங்கக்கார தெரிவானதோடு, தொடரில் இலங்கை 3-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

# ஹுனைஸ் எம்.பி.யின் வாகனம் மீது தாக்குதல்




நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக்கின் வாகனம் மீது இனம் தெரியாதோர் குழுவினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொரல்லை கோட்டா வீதியில் அவரது இல்லத்தில் வைத்தே இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்று மாலை சுமார் 5.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவரது ஊடக இணைப்பாளர் தெரிவித்தார்.

சுமார் 11 பேர் கொண்ட குழுவினரால் இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும், சம்பவத்தின் போது அமைச்சர் வீட்டில் இருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு வழங்குவதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் அண்மையில் விலகியமை குறிப்பிடத்தக்கது.

# எதிர்க்கட்சிக்கு செல்கிறாரா? அமைச்சர் பந்துல குணவர்தன

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன அரசாங்கத்தில் இருந்து எதிர்க்கட்சிக்கு மாறிவிடுவார் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் ஹோமாகமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கும் கூட்டம் ஒன்றுக்கு அமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஹோமாகமை தொகுதி அமைப்பாளராகவும் அமைச்சர் பந்துல குணவர்தன செயற்படுகிறார்.

இந்தநிலையில் அவர் குறித்த கூட்டத்தைப் புறக்கணித்தமை தொடர்பில் ஆளும் கட்சி கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

அமைச்சர் ஜோன் செனவிரட்ன இது தொடர்பில் கூறுகையில் பந்துல குணவர்தனவின் செயல் கண்டிக்கத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஹோமாகமையில் இடம்பெறும் அரசியல் நகர்வுகள் தொடர்பில் அவதானித்துக் கொண்டிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# றிசாத் கறிவேப்பிலை வர்ணிக்கும் பொதுபலசேனா

(வேலணை)

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ள அமைச்சர் றிசாத் பதியுதீனை கறிவேப்பிலை என்று வர்ணித்துள்ளார் பொதுபலசேனாவின் பொதுச் செயலர் ஞானசாரதேரர்.

றிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்க முடிவு செய்துள்ளது குறித்து அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இரண்டு தரப்புகளுமே அதிகாரத்தைக் கைப்பற்றக் கடுமையாக மோதுகின்றன. இருதரப்புக்கும் இடையில் கடுமையான போட்டி நிலவுகிறது.

சில மேலதிக வாக்குகளைப் பெறுவதற்கு சில வேளைகளில் கறிவேப்பிலைகள் தேவைப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

றிசாத் பதியுதீனுக்கும் பொதுபலசேனாவுக்கும் இடையில் கடுமையான கருத்து முரண்பாடுகள் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புலிகள் புதைத்து வைத்த மசகு எண்ணெய் மீட்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, வெள்ளமுள்ளி வாய்க்கால் பகுதியில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஒன்பது மசகு எண்ணெய் பரல்கள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வெள்ளமுள்ளி வாய்க்கால் கடற்கரைப் பகுதியில் இருந்து இராணுவத்தினர் இதனை மீட்டுள்ளனர்.

இறுதி யுத்தத்தின் போது. கடற்புலிகளினால் தங்களது படகுகளுக்கு பயன்படுத்த இவை பதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம் என இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் யுத்த காலத்தில் அந்தப் பகுதியில் கடற்புலிகளின் முகாம் அமைந்திருந்ததாக தெரியவந்துள்ளது.

# திருடிய மாடுகளை வெட்டியவர் பொலிஸாரிடம் சிக்கினார்

(நெல்லியடி)

திருடிய பசு மாடுகள் இரண்டை இறைச்சியாக்கிய நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஜெ.கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

துன்னாலை பகுதியில் திருடப்பட்ட இரண்டு பசுமாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதாக நெல்லியடி பொலிஸாருக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைத்தது.

இதன் அடிப்படையில், அப் பகுதிக்குச் சென்ற குற்றத்தடுப்பு பொலிஸார், அப் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய சந்தேகநபரைக் கைது செய்தனர். அவர் வசம் வைத்திருந்த 35 கிலோ கிராம் இறைச்சியையும் கைப்பற்றினர்.

சந்தேக நபரை நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை பருத்தித்துறை நீதவான் ஜெ.கஜநிதிபாலன் வாசஸ்தலத்தில், முற்படுத்திய போது அவரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

# மைத்திரிக்கு ஆதரவு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு வழங்கவுள்ளதாக கொடிகாவத்தை முல்லேரியா பிரதேச சபையின் தலைவர் பிரசன்ன சோளங்க ஆராச்சி தெரிவித்துள்ளார்.

கொடிகாவத்தையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். எவ்விததடைகள் ஏற்பட்டாலும், மைத்திரிபால சிறிசேன வெற்றிபெறுவதற்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் பிரசன்ன சோளங்க ஆராச்சி சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியலில் நிபுணத்துவம் வாய்ந்த சிலருடன் கலந்துரையாடியே இந்தத் தீர்மானத்தை தாம் எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.